
யா/ புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம்

# அமுதி மலர்




2017


# அமுதமலர்

## 80வது ஆண்டு நிறைவில் வெளியிடப்படும் மலர்




# 2017

# பாடசாலைக் கொடி




விழுவானம்

கடல்

ஆன்மீகம்

தீவின் வளங்கள்

கவின் கலைகள்

கல்வி

நவீனம்

உதயம்

# பாடசாலை கீதம் (School Anthem)

அலைதழுவும் அன்னை மடி தவழும்
மழலைகள் கலை வளர்க்கும்
அன்னை இராஜ இராஜேஸ்வரி
அன்னை இராஜ இராஜேஸ்வரி

எண்ணும் எழுத்துமே கண்களென்று
உணரும் அறிவை நீ எமக்குத் தந்தாய்
இராஜ இராஜேஸ்வரி அன்னை
இராஜ இராஜேஸ்வரி

(அலை தழுவும் அன்னை........)

விந்தை உலகமதை நாமறியும்
வித்தைகளும் விளையாட்டுக்களும்
பணிவுடனே நாம் பயின்றிடவும்
துணிவுடன் வெற்றிகள் பெற்றிடவும்
மனதில் உறுதிதந்து உனதணைப்பில்
தினமும் எமை வளர்க்கும் தாயவளே
இராஜ இராஜேஸ்வரி அன்னை
இராஜ இராஜேஸ்வரி

வாழிய! வாழிய! வாழியவே
புங்குடுதீவு இராஜ இராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம்
வாழிய வாழியவே!!
வாழிய வாழியவே!!

ஆக்கம் : அதிபர் திரு.க.ஸ்ரீதரன்
இசை : சத்தியன், "சப்தமி",
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## பாடசாலையின் முகப்புத் தோற்றம்




## வழிபாட்டிடம்



# பொருளடக்கம்

⇒ ஆசியுரை - ஸ்ரீ வரகத்தி விநாயகர் தேவஸ்தானம்..........................7

⇒ ஆசியுரை – ஆம்ஸ்ரோங் அடிகள்................................................8

⇒ வாழ்த்துச் செய்தி – வடமாகாண ஆளுநர் செயலாளர்.....................11

⇒ வாழ்த்துரை – தீவக வலயக் கல்விப்பணிப்பாளர்...........................12

⇒ வாழ்த்துச்செய்தி – தென்மராட்சி கல்விப்பணிப்பாளர்.......................13

ஆசிச்செய்தி – கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர்................................15

⇒ வாழ்த்துச்செய்தி – வேலணைக் கல்விக்கோட்ட அதிகாரி...................17

⇒ வாழ்த்துரை – ஓய்வுநிலை வேலணைக் கல்விக்கோட்ட அதிகாரி..........18

⇒ அதிபர் அறிக்கை.........................................................................20

⇒ ஆசிச்செய்தி – வைத்தியக் கலாநிதி கணேஸ் ஸ்ரீதரன்.....................28

⇒ வாழ்த்துச்செய்தி – கலாநிதி.கா.குகபாலன், ஓய்வுநிலைப் பேராசிரியர்.....31

⇒ அமுதத்தாயே.... – திரு.இ.குணநாதன், ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்............................33

⇒ வாழ்த்துச்செய்தி – திரு.வீ.கருணைலிங்கம், அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை......................36

⇒ சிறுவர் உரிமை.... – திருமதி.சா.கேதீஸ்வரன், ஆசிரியை.......................39

⇒ மனதார வாழ்த்துகிறேன் - க.மகாலட்சுமி, முன்னாள் ஆசிரியை............41

⇒ மலர் ஒன்று... - சர்வோதயம்.........................................46

⇒ வாழ்த்துச்செய்தி - ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்...............49

⇒ கல்வித்தாயை.... - பழைய மாணவர்கள், கனடா.........................50

⇒ சிறந்த மனிதர்களை..... – திரு.சி.வின்சன்ராஜ், ஆசிரியர்....................52

⇒ வாழ்த்துச்செய்தி – அதிபர், புங்குடுதீவு மகா வித்தியாலயம்...............57

⇒ மெய்ப்பொருள்...... - பொது சுகாதார பரிசோதகர்...........................58

⇒ வாழ்த்துச்செய்தி – தலைவர், புங்குடுதீவு உலக மையம்....................59

⇒ வாசிப்பின்..... – திருமதி.ச.தர்மலோஜினி, ஆசிரியை.........................60

⇒ அமுதவிழா... - சைவ இளைஞர் சங்கம், புங்குடுதீவு.......................65

⇒ மொழித்திறன்.... - செல்வி.கு.ஜன்யா........................................67
⇒ கண்ணகி வழக்குரை... - செல்வன் க.கரிகரன்............................68
⇒ ஆசை – செல்வி.சா.கபிஷாயினி.............................................73
⇒ விடுகதைகள் - செல்வன்.வெ.சுலக்ஷன்.....................................74
⇒ போராடி வெல் - செல்வன்.மோ.டிலக்ஷன்..................................75
⇒ முன்பள்ளிக் கல்வியே..... – திருமதி.ஜெ.இராஜேஸ்வரி,
முன்பள்ளி ஆசிரியை............................77
⇒ கோடி பல்லாண்டு.... – "கலைத்தீவான்"..................................80
⇒ இராஜராஜேஸ்வரியே.... – செல்வி.ச.அனுஷா,
தொண்டர் ஆசிரியை.......................82
⇒ குரங்குநடனம் - செல்வன் க.கரிகரன்.......................................85
⇒ உன்னை நம்பு – செல்வி.சா.காயத்திரி.....................................86
⇒ கற்றுக்கொள்ள வேண்டியவை - செல்வி.கு.ஜன்யா.........................87
⇒ நாம் சென்ற கல்விச்.... – செல்வி.ச.டிலக்சனா............................88
⇒ குருவழி தொழுதே.... – செல்வன்.ச.சுலக்ஷன்.............................92
⇒ அணிற்பாடல் - செல்விச.டிலக்சனா..........................................93
⇒ பொது அறிவு – செல்வி.க.கம்சிகா..........................................94
⇒ பரிசில்நாள் பேச்சு – செல்வன்.வெ.சுலக்ஷன்...............................96
⇒ Prize day Speech – Miss.S.Gayathiry.......................................97
⇒ இலங்கை பற்றிய... - சா.காயத்திரி..........................................98
⇒ பரிசில் பெறுவோர்............................................................103
⇒ உதவியோர் விபரம்..:.........................................................105
⇒ நன்றிகள்.......................................................................106

மேன்மை கொள் சைவ நீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகை செய்வோம்

ரொறன்ரோ

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

## அமுத விழாக்காணும் புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ்க்கலவன் வித்யாசாலை

*குருப் பிரம்மா குரு விஷ்ணு, குருதேவோ மஹேஸ்வர:*
*குரு சாட்சாத் பரப்பிரம்மா, தஸ்மை ஸ்ரீ குருவே நம:*

“மழலைக் கல்வி சிலையில் எழுத்து” என்ற கூற்றுக்கமைவாக தம்மை நாடிவரும் மாணவர்களை சிறப்பாக செதுக்கி அறிவிலும், ஆற்றலிலும், கலைகளிலும், உழைப்பிலும் உயர்வு பெறவேண்டும் புங்குடுதீவு மக்கள் ஒற்றுமையும், ஆற்றலும் ஒருங்கிணைந்து சிறந்த பிரஜைகளாகத் திகழவேண்டும் எனச் சிந்தித்து அதனைச் செயற்படுத்த உறுதுணையாக விளங்கும் புங்குடுதீவு இராஜேஸ்வரி தமிழ்க்கலவன் வித்யாசாலை நிர்வாகிகள் மற்றும் அங்கு பணிபுரியும் ஆசிரிய ஆசிரியைகளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

புலம் பெயர்ந்து வாழும் வித்யாசாலை பழைய மாணவர்கள் சிறந்த அறிவுசார்ந்த பலதுறை நிபுணர்களாக, பலதிறமைகள் கொண்ட எம்மண்ணின் மைந்தர்களாக, அறிவுத்திறனிலும், பொருளாதார வளத்திலும் கலையுணர்விலும், தமிழ்மொழி உணர்விலும், சமயநெறி வாழ்விலும், வர்த்தகத் துறையிலும், சமூக நல்வாழ்விலும், கற்ற பாடசாலைக்கும், கற்பித்த ஆசிரியர்களுக்கும், புங்குடுதீவு கிராமத்திற்கும் உலகளாவிய ரீதியில் பெருமை சேர்க்கும் வகையில் சிறப்புற வாழ்ந்து வருகின்றனர்.

புங்குடுதீவு இராஜேஸ்வரி தமிழ்க்கலவன் வித்யாசாலை 80வது ஆண்டில் தனது வளர்ச்சியில் மென் மேலும் உயர்ச்சி பெற்று சிறந்த கல்வித்திறனிலும், கலைகளிலும், சமயநெறிமுறைகளிலும் முதன்மையுடன் திகழ்ந்த எமது ஊர் மீண்டும் தேமதுரத் தமிழறிவிலும், மேன்மை கொள் சைவநெறியிலும், கலைபண்பாடுகளிலும், விஞ்ஞானத்திலும், மெஞ்ஞானத்திலும் எம் எதிர்கால இளம்தலைமுறையினர் திறமைபெற வழி செய்யும் வித்தியாசாலையாக சிறப்புற ஸ்ரீ வரசித்தி விநாயகரின் திருவருளுடன் வாழ்த்துகின்றேன்.

“அனைவரும் அன்பால் இணைவோம்”



“சிவாச்சார்யகலாநிதி” “சிவாச்சார்ய குலபூஷணம்”
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள்** (ஐயாமணி சிவம்)
ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான ஸ்தாபகர், முதல்வர், பிரதமகுரு
புங்குடுதீவு 10 - கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான முதல்வர், பிரதமகுரு

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
3025 KENNEDY RD. UNIT-10, SCARBOROUGH, ON. M1V 1S3 CANADA.
416.291.8500 www.vinaayagar.com



ஆண்டவரே ஞானத்தை வழங்குகின்றார் அவரிடமிருந்தே அறிவும் தெளிவும் வருகின்றன. (நீதிமொழிகள் நூல் 2 : 6)

யா/புங்குடுதீவு இராஜஇராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம் தனது 80வது ஆண்டில் அமுதவிழாவை கோலகலமாக கொண்டாடுகின்றது. கல்வி என்பது தீவகத்தின் மாபெரும் சொத்து. புங்குடுதீவு மண்ணும் இதற்கு விதிவிலக்கல்ல. அன்றைய திண்ணைப் பாடசாலைகள் தொடக்கம் இன்று வளர்ந்து நிற்கும் மாபெரும் கட்டிடங்கள் அனைத்தும் கல்விக்கு இம்மண் கொடுத்த அக்கறையை எடுத்துக் காட்டி நிற்கின்றது.

இப்பிரதேச மக்கள் கல்விக்கு அன்று கொடுத்த அக்கறையும் கரிசனையும் வரவேற்கத்தக்கது. தொடர் இடப்பெயர்வுகளும் போர்ச் சூழல்களும் எம்மண்ணை வாட்டி வதைத்தமையால் 1991ம் ஆண்டுடன் மூடப்பட்ட இப்பாடசாலை பிரதேச மக்களின் ஒத்துழைப்புடனும் அக்கால தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு ஜோன் குயின்ரஸ் அவர்களின் அற்புத வழிகாட்டலுடன் மீண்டும் திறக்கப்பட்டது. அந்நாள் தொட்டு இன்று வரை அதிபராக கடமையாற்றி வரும் திரு.க.ஸ்ரீதரன் அதிபர் அவர்களின் பணி சிறப்பானதொன்று. மிகக் கடினமான பயணத்தை மேற்கொண்டு வருவதும் கண்கூடு. குறைந்த தொகை மாணவர்களுடன் வெற்றிப் பாதையில் பயணித்து வருகிறது. இதற்கு பிரதேச மக்களின் ஒத்துழைப்பும் அளவு கடந்து நிற்பதும் கண்டு வாழ்த்துகின்றேன். அமுதவிழா கண்டு மகிழும் இப்பாடசாலைச் சமூகத்துடன் நானும் இணைந்து நிற்கின்றேன்.

கல்வி எனும் அழியாத சொத்தை வாரிவழங்கும் இப்பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் மாணவச்செல்வங்கள் பெற்றோர் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றேன்.

இறை பணியில்
அருட்பணி சி.லீயோ ஆம்ஸ்ரோங்
(புனித பாசையூர் அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை)
- புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய முன்னாள் பங்குத் தந்தை

**நீ செய்வதனைத்திலும் உன்னை நினைப்பதற்கு மாறாக இறைவனையே நினைத்துக்கொள்**

**~ வின்சென்ட்பெரர்**

அதிபர்

# திரு.கந்தசாமி ஸ்ரீதரன்



ආණ්ඩුකාර කාර්යාලය
උතුරු පළාත
පැරණි උද්‍යානය
චුණ්ඩුක්කුලි, යාපනය

ஆளுநர் செயலகம்
வட மாகாணம்
பழைய பூங்கா, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்

**GOVERNOR'S SECRETARIAT**
**NORTHERN PROVINCE**
Old Park, Chundukkuli,
Jaffna

செயலாளர் / ලේකම් / Secretary: 021-2220661
பொது / සාමාන්‍ය / General: 021-2220660
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021-2220661


எனது இல / මගේ අංකය / My No: G/NPC/A3/2017

திகதி / දිනය / Date: **27.11.2017**

## வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளரின் வாழ்த்து செய்தி

இலங்கைத்தீவின் மணிமகுடமாக விளங்கும் யாழ் மண்ணின், தீவகத்திலே புங்குடுதீவில் அமைந்துள்ள யாழ் இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 80ஆவது ஆண்டு பூர்த்தியை கொண்டாடுவதனையிட்டு வெளியிடப்படும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைவதுடன் பாடசாலை சமூகத்திற்கு மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்னும் வள்ளுவனின் குறளின்படி எண்ணும் எழுத்தும் மனிதர்களின் இரு கண்களிற்கு ஒப்பானவை. இவற்றின் வழியே உலகை அறியலாம் என்பதுடன் அவற்றைக் கற்பதன் மூலமே மேன்மை அடையலாம் என்பதை எடுத்தியம்புகிறார்

இவ்வகையில் இப் பாடசாலை 1937ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நாட்டிலே ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1991ம் ஆண்டு மூடப்பட்டு. பின்பு மீண்டும் 2013 தொடக்கம் அப்பிரதேச மாணவர்களிற்கு ஒழுக்கத்துடன் கூடிய கல்வி செல்வத்தை வழங்கி வரும் இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மற்றும் பழைய மாணவர்கள் பாராட்டிற்குரியவர்கள்.

இப் பிரதேசத்தில் உள்ள மாணவர்களை சமூகத்திற்கு பொருத்தபாடுடையவர்களாக உருவாக்கும் கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் இவ் வித்தியாலயம் வெளியிடும் சஞ்சிகையானது மாணவர்களின் ஆக்கதிறன்களை ஊக்குவிக்கும் சஞ்சிகையாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்பதுடன் இவ் வித்தியாலய அதிபர் அவர்களது சிந்தனைத் தெளிவும் உயர்ந்த இலட்சியத்துடனான சுறுசுறுப்பான செயற்திறனும் இவ்வாறான செயற்பாடுகளிற்கு ஆதாரமாக அமைவது போற்றப்படத்தக்கதாகும்.

எனவே இவ் வித்தியாலயத்தால் வெளியிடப்படும் சஞ்சிகையை வாழ்த்துவதுடன், இவ் வித்தியாலயத்தின் சேவை மேலும் சிறப்புடன் தொடரவும், கல்விச் செல்வத்துடன் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் இப் பாடசாலை சிறந்து விளங்க வேண்டுமென்றும் வாழ்த்தி நிற்கின்றேன்

இ.இளங்கோவன்
ஆளுநரின் செயலாளர்
வடமாகாணம்

இ.இளங்கோவன்
ஆளுநரின் செயலாளர்
வட மாகாணம்


Email: npcgovernor@gmail.com
Web: www.np.gov.lk

வலயக் கல்வி அலுவலகம் - தீவகம்
කලාපඅධ්‍යාපනකාර්යාලය – දූපත්
ZONAL EDUCATION OFFICE – ISLANDS

## வாழ்த்துரை



ஆரம்பப் பாடசாலைகளில் வழங்கப்படும் தரமான கல்வியே உயர்தரங்களில் கல்வி கற்றலுக்கும், வாழ்க்கைமுழுவதும் உயர்வை நோக்கி பயணிப்பதற்கும் அடித்தளமாக அமைகின்றது. அந்தவகையில் யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம் போர்க்கால இடர்பாடுகளிலிருந்து மீண்டெழுந்து ஆரம்பக்கல்வியின் பண்புசார் தன்மைகளில் கவனம் செலுத்தி, பின்தங்கிய பிரதேச பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்கவேண்டும் என்ற ஆர்வத்தோடு இயங்கிவருகின்றமை சிறப்பம்சமாகும்.

தன்னார்வமும், மாணவர்களின் சூழல் தேவைகளையும் அறிந்து பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுகின்ற அதிபர், ஆசிரியர்கள் இப் பாடசாலையில் பணிபுரிவதால் இப்பாடசாலையின் எண்பதாவது நிறைவு விழாவையும் "அமுதமலர்" வெளியீட்டினையும் சிறப்பாக மேற்கொண்டுள்ளனர்.

அவர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு எண்பதாவது ஆண்டு நிறைவுவிழாவும், மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. ஆ.இளங்கோ
வலயக்கல்விப் பணிப்பாளர்
தீவகம்



# வாழ்த்துச் செய்தி

பொன் கொடு தீவெனும் சிறப்புப் பெயர் கொண்ட புங்குடுதீவிலே பல வகையிலும் சிறப்புக் கொண்ட இராஜராஜேஸ்வரி வித்தியாலயம் தனது எண்பதாவது அகவையை கொண்டாடும் இந்நிகழ்வின் மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

கடந்த சில தசாப்தங்களில் இடம்பெற்ற யுத்த சூழலில் நாம் இழந்தவை பல. அவற்றுள் கல்வியும் ஒன்றாகும். தற்போது இழந்தவை பலவும் துளிர் விடும் நேரம். இந்தப் பொன்னான காலத்தை இவ்வித்தியாலயமும் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுத்த வேண்டும்.

> "அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
> ஆலயம் பதினாயிரம் நாட்டல்
> அன்னயாவினும் புண்ணியம் கோடி
> ஆங்கோர் ஏழைக்கெழுந்தறிவித்தல்"

என்ற பாரதியின் காற்றுக்கு ஏற்ப இவ்வித்தியாலயம் கல்விப்பணியிலே அதிக சிந்தனை எடுத்து அறிவொளி பரப்ப உதவுவது இவ்வித்தியாலயத்தைச் சேர்ந்தோரின் தலையாய பணியாகும்.

அமுதவிழா ஆண்டைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து ஒரு வரலாற்றுப் பதிவாக இம்மலரை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் காட்டிய அதிபர், ஆசிரியர், மாணவர், சமூகத்தைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கல்வி ஒளி காட்டி அறிவுக் கண்ணைத் திறக்க அனைவரையும் வாழ வைக்க, புங்குடுதீவில் என்றும் இவ்வித்தியாலயம் நிலைத்து நின்று பணி செய்ய வேண்டும் என வாழ்த்தி என் ஆசிகளையும் நல்கி நிறைவு செய்கின்றேன்.

திரு.சு.சுந்தரசிவம்,
கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி கல்வி வலயம்,
(முன்னாள் கல்விப் பணிப்பாளர்,
தீவகக் கல்வி வலயம்)

**சுமைகளைக் கொடுத்த கடவுள்**
**தோள்களையும் கொடுத்திருக்கிறார்**
**~ யூதப் பழமொழி**



## ஆசிச்செய்தி

புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி வித்தியாலயம். இது புங்குடுதீவில் ஒரு ஆரம்பப் பாடசாலை. ஆயிரம் பாடசாலை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. எனினும் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப் பாடசாலை இனங்காணப்பட்ட போது உயர்தரப்பிரிவுகள் கொண்ட பாடசாலையான புங்குடுதீவு மகா வித்தியலயத்தின் ஊட்டல் பாடசாலையாக மீள ஆரம்பிக்கப்பட நிதியுதவியும் கிடைத்தது.

இப் பிரதேச மக்கள், நேர்த்தியாக மீளக் குடியேறாத போதிலும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்புக்களின் நிறுத்தம் இப் பாடசாலையை மீள ஆரம்பிக்க வழிகோலியது எனலாம்.

இப்பாடசாலை 1937 முதல் 1991 வரை சிறப்பாக இயங்கியது. அதன்பின்னர் யுத்த அனர்த்தம், இழப்பீடுகள், இடப்பெயர்வுகள் எல்லாவற்றையும் சந்தித்து புலம் பெயர்ந்து யாழ்ப்பணத்தில் பல இடங்களில் இயங்கினாலும் கூட மீள தீவகத்திற்கு மக்கள் வந்தபோதும் இப் பாடசாலை தனக்குரிய சொந்த இடத்தில் மீள ஆரம்பிக்க இயலாமல் போனது.

1991 இன் பின் தீவகம், மின்சார வசதியின்மை, குடிநீர், போக்குவரத்து, மருத்துவம், பாதுகாப்பு என பல தரப்பட்ட பிரச்சினைகள் உள்ள பூமியாகக் காணப்படுகின்றது.

ஆயினும், இப் பாடசாலை 2013 இல் தற் (இறை) செயலாக மீள ஆரம்பிக்கப்பட்டது மட்டுமல்லாது என்னால் அதிபர் தரம் சேர்ந்த ஒருவரையும் மீள் ஆரம்பப் பாடசாலைக்கு அதிபராக்கக் கூடியதாக இருந்தது. இதன் காரணமாக உறுதியும், நம்பிக்கையும் கொண்ட பாடசாலையாக இப் பாடசாலை மீண்டெழ ஆரம்பித்தது. கல்வியின் இலக்கை நோக்கி மட்டுமல்ல புத்தம் புதிய சாதனைகளையும் நடத்தி

நிறைவேற்றி நிற்கின்றது. அந்த வகையில் 80வது அகவை நிறைவில் இம்மலர் சிறார்களின் ஆக்கங்களுடன் வெளிவருவது சிறப்பானதாகும். இதற்காக உழைத்த அனைவரையும் பாராட்டுவதுடன் விழாவும் சிறக்க வாழ்த்துகின்றேன். அனைவருக்கும் விழா இனிக்க எனது நல்வாழ்த்துக்கள்.

திரு.தி.ஜோன் குயின்ரஸ்,
(முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்)
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

**பாடசாலை வெறுமனே கட்டடம் அல்ல அது இன்னொரு ஜனனத்தைத் தரும் கருவறை**

## அமுதவிழா

## வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் பெருமை மிக்க புங்குடுதீவில் எம்மையெல்லாம் காத்து அருள்பாலிக்கும் அன்னை பராசக்தியின் பெயரைக் கொண்ட இராஜராஜேஸ்வரி வித்தியாலயத்தின் அமுதவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆரம்ப வகுப்புக்களைக் கொண்டதும் நீண்டகல்வி பாரம்பரியத்தைக் கொண்டதுமான இப்பாடசாலை தொடர்ந்து கல்விப்பணியாற்றி வருவது பாராட்டுதற்குரியது. யுத்த இடப்பெயர்வால் கல்வியில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டாலும் தற்போது மீண்டும் புத்துயிர் பெற்று புதுப்பொலிவுடன் கல்வியில் வீறுநடை போடுவது வரவேற்கத்தக்க விடயம். மாணவர் தொகை குறைவான போதும் அவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அதிபர், ஆசிரியர்களின் பணி பாராட்டுதற்குரியது. எதிர்வரும் காலங்களிலும் இவ்வித்தியாலயம் வளர்ச்சி பெற எம் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

வளர்க இவ்வித்தியாலயம்

திருமதி சா. கிருஷ்ணதாஸ்
கோட்டக்கல்விப்பணிப்பாளர்
நெடுந்தீவு / வேலணை



# வாழ்த்துரை

யாழ் மாவட்டத்தின் தென்பாலமைந்த எழில் கொஞ்சும் சப்ததீவுகளில் பரந்த நிலப்பரப்பினைக் கொண்ட அழகிய கிராமம் தான் புங்குடுதீவு.

இக்கிராமத்தின் சிறப்பம்சங்கள், பல் துறைகளிலும் வளர்ந்தோங்கி நிற்பதாகும். அதாவது கல்வியாளர்கள் என எடுத்துக் கொள்ளும் போது, அரச பணியில் முதன்மை மிகு நிர்வாகிகள், அதிபர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள் என உயர் பதவி வகிப்போர். தலைசிறந்த கலைஞர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், தொழில் அதிபர்கள், வர்த்தக ஸ்தாபனங்களை அமைத்து அயராது உழைப்போர், இன்னும் பல துறைகளிலும் வெளிநாடுகளில் முன்நிலை வகிப்போர் தமது பிறந்த மண்ணிற்கு மகிமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

விதிவசமாக தீவக மக்கள் 1990 ஆம் ஆண்டில் தமது தேசத்தைத் தொலைத்து இடப்பெயர்வு எனும் இன்னலில் தள்ளப்பட்டார்கள். இதன் விளைவாக இக்கிமத்தில் மூடப்படும் நிலை ஏற்பட்டது.

இதன் விளைவாக இக்கிராமத்தில் உன்னதமாக இயங்கிய இராஜராஜேஸ்வரி வித்தியாலயம் மூடப்படும் நிலை ஏற்பட்டது.

மீண்டும் இவ்வித்தியாலயம் 2013 ம் ஆண்டில் இராஜராஜேஸ்வரி அம்மன் அருட் கடாட்சத்தினால் - கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் மீள ஆரம்பிக்கப்பட்டது.

அதிபர் தரம் சார்ந்த ஆற்றலும், பல்துறைகளிலும் இவ்வித்தியாலயம் பரிணமிக்க வேண்டும் எனும் பேரவாவும் கொண்ட பொறுமையும், தகுதியும் தன்னகத்தேயுடைய கந்தசாமி ஸ்ரீதரன் அவர்களை நியமித்து நிமிர்ந்து வீறு நடைபோடுகின்றது.

"கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" என்பது போல் அதனை நிரூபணமாக்க வேண்டும் எனும் நேர்த்தியான கொள்கையிலே இப்பாடசாலை அதிபர் முயற்சிப்பது பலராலும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

அந்த வகையிலே இப்பாடசாலை இன்று தனது எண்பதாவது அகவையிலே "அமுதவிழா" காணுகின்றாள்.

இந்த வகையிலே இப்பாடசாலை எல்லாம் வல்ல எம் பெருமாட்டி இராஜஇராஜேஸ்வரி அம்மன் கடைக்கண் பார்வையினால் நற்கதி பெற்று மென் மேலும் வளர்ச்சிப் பாதையில் நகர்ந்து மாணவச் செல்வங்கள் வளம் பெற வேண்டும் என அம்மனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து எனது வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பொ.சிவானந்தராஜா
ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
வேலணை

**மனநிறைவிலிருந்தே மகிழ்ச்சி பிறக்கிறது**

**~ லாமா**

# அதிபர் அறிக்கை

என்னை பெற்று வளர்த்த தெய்வங்களை வணங்கிக் கொண்டு நான் ஆளாகக் கல்வியூட்டிய ஆசான் பெருமக்களை நெஞ்சில் நிறுத்தி அன்று முதல் இன்று வரை வழிகாட்டிகளாகத் திகழும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் சிரம் தாழ்த்தி என்பணிக்குப் பக்கபலமாயிருக்கும் என் வாழ்க்கைத்துணைக்கும் மனமார நன்றி கூறி எல்லோரும் சுபீட்சம் பெற அம்பாளின் பாதக்கமலங்களில் என் சிந்தையை அர்ப்பணமாக்கி என்பணி தொடர்கின்றேன்.

கல்விக் கண்ணைத்திறந்து சமயம் சார் நல்லொழுக்கங்களினூடாக எதிர்காலச் சந்ததியை பயன்பெறு மாந்தராக்கும் நல்சிந்தை கொண்ட மகான்கள் கல்விச்சாலைகளை தம்பொருள் ஈய்ந்து ஆரம்பித்துக்கொண்டிருந்த காலம், ஈழத்தின் முத்துச் சிதறல்களான தீவகங்களிலேயும் இக்கைங்கரியம் முனைப்புப் பெற்றிருந்தது. அவ்வாறான ஒரு வித்திடலே அம்பாள் இராஜராஜேஸ்வரியின் பேரருளால் உருவான இக்கல்விச்சாலை. ஆரம்பம் முதல் இப்பாடசாலை கண்ட இன்னல்கள், எதிர் நீச்சல்கள், சாதனைகள் மூலம் வளர்ச்சி என்பன இவ்வூர் சார்ந்தவர்கள் கல்விகற்றவர்கள் மற்றும் கற்பித்தவர்களால் இந்நூலில் எடுத்தியப்பப்பட்டுள்ளன.

சந்தித்திருக்கக் கூடாத பேரிடர் ஒன்றை எங்கள் சந்ததி சந்தித்த காரணத்தால் நாம் இழந்தவைகள் எண்ணிலடங்காது. ஆவ்வாறே இப் புண்ணியபூமியும் எதிர்கொண்ட இடம் பெயர்வால் 1997ம் ஆண்டு தொடக்கம் 2012 வரை மனக்குமுறலுடன் இக்கல்லூரித்தாய் வாய் மூடி மௌனித்திருந்தாள். மீண்டெழவைக்கும் பேரவாவுடன் பலர் மெற்கொண்ட அயராமுயற்சியினாலும் தீவகவலயக் கல்விப்பணிப்பாளர் களாகவிருந்த திரு.இராதாகிருஷ்ணன், திரு ஜோண்குயின்ரஸ்

ஆகியோரின் முனைப்பான உந்துதல்களாலும் இப்பாடசாலை மீள உதயம் பெற்றது.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் ஊட்டப்பாடசாலையாக 2012ன் இறுதியில் நிதி ஒதுக்கப்பட்டு அப்போது புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபராக விருந்த அமரர். சதாசிவம் கணேஸ்வரன் அவர்களிடம் பொறுப் பொப்படைக்கப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. 30.11.2012 அன்று அதிபர் தரத்துடன் என்னை இப்பாடசாலைக்கு நியமனம் செய்தனர். நான் ஆரம்பக் கல்வி கற்றது எனது பிறந்த மண்ணில் தற்போது வரணி மத்திய கல்லூரியாகப் பரிணாமம் பெற்று வளர்ந்திருக்கும் வரணி மகாவித்தியாலயத்தில், முதல் ஆசிரிய நியமனம் பெற்றது அதே மண்ணைச்சோந்த வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் முதன் முதல் அதிபர் நியமனம் பெற்றது இப்பாடசாலையில். எனவே இவை என்வாழ்வில் எனது வணக்கத்திற்குரிய தலங்களாக இருப்பதில் நான் பெருமை யடைகின்றேன்.

இப்பாடசாலையைப் பொறுப்பேற்றதிலிருந்து சகல ஒத்தாசைகளையும் ஆலோசனைகளையும் நான் முகம் கொடுத்த இடர்களுக்கு ஆறுதலளித்து பக்க பலமாகவிருந்த அதிபர் அமரா் கணேஸ்வரன் அவர்களை இந்த இடத்திலே பெரு நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

அன்றிலிருந்து என்னுடன் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட திருமதி சாந்தினிதேவி கேதீஸ்வரன், திருமதி தர்மலோஜினி சதீஸ்வரன், திரு சிலுவைராசா வின்சன்ராஜ், இப்பாடசாலையிலிருந்து மாற்றலாகிச் சென்ற க.ஆனந்தராசா ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவைகளுடன் எனது பணியைத் தொடர்கின்றேன். அத்துடன் ஆரம்பத்தில் எமது பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராகத்

தெரிவு செய்யப்பட்டிருந்த திருமதி மகாலிங்கம் தவநிதி அவர்களும் தொடர்ந்து அதே பதவிக்குத் தெரிவான திரு வீ.சந்திரபாலன் அவர்களும் எம்மைவிட்டுப் பிரிந்தலில் பாடசாலை சமூகமே ஆற்றொணாத் துயரடைந்தது. அவர்கள் தமது காலத்திலே பாடசாலையின் தேவைகளைக் கண்டறிந்து புலம்பெயர்ந்த இவ்வூர் வாசிகளுடன் தொடர்பு கொண்டு உதவிகள் பெற்று பாடசாலை மீளப் புத்துயிர் பெறுவதற்கு மிகவும் ஒத்தாசையாகவிருந்தனர். இவர்களின் சேவைகளை இருநேரம் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

இப்பாடசாலையின் ஆரம்பம் தொடக்கம் தீவக வலயத்தின் அனுமதியுடன் தொண்டர் ஆசிரியையாகக் கடமைபுரியும் செல்வி. அனுசா சந்திரபாலன் அவர்களின் தன்னலமற்ற இதயசுத்தியான சேவையை பாடசாலை சமூகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அத்துடன் எமது பாடசாலையில் இயங்கும் 'சர்வமதம்' முன்பள்ளி ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி ஜெயக்குமார் அவர்களும், அவர்களுடன் செல்வி வேதநாயகம் சர்மிளி அவர்களும் பாடசாலையின் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கு என்றென்றும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். அத்துடன் முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 'பாண்ட்' இசைக்கருவிகள் தான் எமது பாடசாலை மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்காக முன்பள்ளி ஸ்தாபகர் மற்றும் நிருவாகத்தினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலையின் பௌதீகவளம் அடிப்படையாகப் போதுமானதாக இருந்தாலும் ஆரம்பத்தில் சில சிரமங்களை எதிர் நோக்கிய காரணத்தால் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அண்மியபாடசாலை சிறந்த பாடசாலைத்திட்ட நிதிஒதுக்கீட்டில் வகுப்பறைப் பாதுகாப்பு மற்றும் சமையலறை அமைப்பு என்பவற்றுடன் அலுவலக அறையும் இடம்மாற்றப்பட்டு சீரமைக்கப்பட்டது.

மேலும் ஆளுநரின் செயலாளர் திரு. இளங்கோவன் சேர் அவர்களிடம் கோரிக்கை விடப்பட்டதற்கிணங்க திணைக்களத்தினூடாக பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியில் சகல வசதிகளுடன் கூடிய நவீன மலசலகூடம் ஒன்று அமைக்கப்பட்டு மாணவர் ஆசிரியரின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. புங்குடுதீவு கடற்படையினரும் தமது பொது சேவைகளின் கீழ் ஆசிரியர் மலசலகூடம் ஒன்றை அமைத்துத் தந்துள்ளனர்.

இவ்வாறே பாடசாலை ஆரம்பிக்கும் போது தீவக வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்த திரு.ஜோன் குயின்ரஸ் அவர்கள் ஆரம்பத்தில் தேவையான சகல வசதிகளையும் வழங்கியதுடன், தேவையான காலங்களில் நிதிகளை ஒதுக்கி இப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறைப்பட்டு செயலாற்றினார். அத்தோடு மீள் ஆரம்பவிழா பாடசாலை மெய்வல்லுநர் நிகழ்வுகள் என்பவற்றிலும் பங்குபற்றி ஆக்கமும் ஊக்கமும் தந்தார். அதிபராகிய நான் எதிர்கொண்ட பாடசாலை ரீதியான சில சவால்களுக்கு கும் கொடுத்து நான் செயற்பட பக்கபலமாக நின்றார். தொடர்ந்து பதவியேற்று வந்த வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சுப்பிரமணியம் சுந்தரசிவம் அவர்களும் நேரில் பாடசாலைக்கு வருகை தந்து மலசலகூட வசதியின்மையைக் கண்ணுற்று துரிதமாக அந்நிதியை விடுவிப்பதற்கு ஆவன செய்ததுடன் சகல செயற்பாடுகளுக்கும் அனுமதியும் ஆலோசனைகளும் வழங்கி வந்தார். இந்நிகழ்வு நடைபெறுவதற்கும் மலர் வெளியீட்டிற்குமான அனுமதி கோரிய போது மகிழ்வுடன் ஊக்கமளிக்கும் வார்த்தைகள் கூறி ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் வழங்கினர். தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கல்விப்பணிப்பாளர் திரு.ஆ.இளங்கோ அவர்களும் இந்நிகழ்வு மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துத் தெரிவித்து ஊக்கமளித்தார். இவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் மனநிறைவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னும் வேலணை கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள் திரு.பகீரதன் அவர்களும் தொடர்ந்து திரு.பொன்னம்பலம் சிவானந்தராசா அவர்களும் அடிக்கடி பாடசாலைக்கு வருகை தந்து வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்தனர். அத்துடன் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. விசுவலிங்கம் தனிநாயகம் அவர்களும், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் திரு.இராசரத்தினம் குணநாதன், திரு.பாஸ்கரன் அவர்களும் பாடசாலையில் காட்டிய அக்கறையுடன் கூடிய ஆக்கபூர்வ ஆலோசனைகளும் மறக்க முடியாதவை. அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இன்னும் இப்பாடசாலையில் முதல் நியமனம் பெற்று இப்பொழுது கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபராகவிருக்கும் திரு.வீ.கருணைலிங்கம் அவர்களையும் ஓய்வு பெற்ற அதிபர் திரு.பஞ்சலிங்கம் அவர்களும் மற்றும் ஓய்வுநிலை அதிபர்கள் திரு.சண்முகலிங்கம், திரு.நல்லையா கலைநாதன் எமக்குத் தந்த ஒத்துழைப்புக்களுக்கும் ஆதரவுகளுக்கும் எமது நன்றிகள்.

மற்றும் இவ்வூர் வாசியான வைத்தியகலாநிதி திரு.கணேஷ் ஸ்ரீதரன் அவர்கள் பாடசாலை தேவைகளை முகநூல் ஊடாக பழைய மாணவர்கட்கு தெரியப்படுத்தியதற்கிணங்க சரஸ்வதி சிலை அமைத்துத் தரப்பட்டுள்ளது. அத்தோடு இவ்விழாவும் மலர் வெளியீடும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பாடசாலை மாணவர்களின் கல்விச் சுற்றுலாவின் போது வருகை தந்து பிள்ளைகளைச் சந்தோசப்படுத்தியதுடன் ஆதரவாக இருந்தார். அவர்களுக்கு பாடசாலை சமூகம் கடமைப்பட்டுள்ளது. அவர்களுக்கும் எமது தனிப்பட்ட நன்றிகள். பேராசிரியர் க.குகபாலன் அவர்கள், ஓய்வுநிலை அதிபர் திரு.கந்தையா தேவதாஸ் கண்ணகை அம்மன் கோயில் பரிபாலனசபையின் தலைவர், புங்குடுதீவு பாடசாலைகளின்

அதிபர்கள் புங்குடுதீவு சர்வதோய அறங்காவலர், புங்குடுதீவு, கனடா, பிரான்ஸ், சுவிஸ், லண்டன் பழைய மாணவர்கள் ஆகியோருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். மேலும் பேராசிரியர் திரு.க.குகபாலன் அவர்களுடைய பெருமுயற்சியின் பலனாக இப்பாடசாலையின் பழைய மாணவர்களாகிய பாலச்சந்திரன், அருந்ததிதேவி, கல்விக்கரசி, விக்னேஸ்வரன், சிவச்சந்திரன், பிரேமசந்திரன் ஆகியோர் தமது பெற்றோராகிய அமரர்கள் கந்தையா தங்கம்மா ஞாபகார்த்தமாக நிதியம் ஒன்றை ஆரம்பித்து அதில் ரூ.600000 (ஆறு லட்சத்தை) நிரந்தர வைப்பிலிட்டுள்ளார்கள். அவ்வைப்பின் வட்டி சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு அதனூடாக பாடசாலையின் தேவைகளுக்கு பாடசாலை அதிபர் உட்பட இருவர் கையொப்பமிட்டு மீளப் பெறுவதற்குமான ஒப்பந்தத்தையும் வங்கியோடு செய்து தருகின்றனர். இக்கைங்கரியத்திற்கு பாடசாலை சமூகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. இவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் பாடசாலையின் தெற்குப்புற வேலிக்கு 130′ மதிலையும் அமைத்துத்தர சம்மதித்துள்ளதுடன் ஏப்ரல் மாதத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளனர். பௌதீக வளத் தேவைகள் பெரும்பாலும் எல்லோருடைய பங்களிப்பு மற்றும் ஆதரவுகளுடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கல்வி அபிவிருத்தி தொடர்பாக 2013ல் 1ம், 2ம், 3ம் தரங்களுடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 2015ம் ஆண்டு முதலில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றினார்கள். அவ்வாண்டில் இருவரும், 2016ல் ஒரு மாணவனும், 2017ல் மூவரும் அரசாங்கம் நியமித்த புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். இது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஒரு சான்றாகும். மற்றும் மெய்வன்மைத்திறன் போட்டிகள் மற்றும் தமிழ்த்தின, துரித கணித போட்டிகள், கவின் கலைப் போட்டிகளில் பங்குபற்றி குறிப்பிடத்தக்க

பெறுபேறுகளையும் பாராட்டுக்களையும் மாணவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். விசேடமாக பொது அமைப்புக்கள் நடாத்திய கட்டுரைப் போட்டியில் 1ம் இடத்தையும், அறிவிப்பாளருக்கான போட்டியில் மாகாண மட்டம் வரை 1 மாணவர் தெரிவானதும் குறிப்பிடக்கூடியவைகள். இன்னும் கல்வியிலும் புறச்செயற்பாடுகளிலும் விசேட திறனுள்ள மாணவர்கள் இங்குள்ளனர். பெற்றோரின் ஊக்கமும் ஏனையோரின் ஆதரவும் இருக்கும் பட்சத்தில் பெரும் வெற்றிகளை ஈட்டுவார்கள் என்பது திண்ணம். அதற்கு எடுத்துக்காட்டாக கல்வியிலே சிறந்தஇரண்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு புலம்பெயர் அன்பர் ஒருவரின் நிதியிலிருந்து கல்விக்கான உதவி பெற்றுக்கொண்டுள்ளனர்.

எனவே எல்லோருடைய பூரண ஒத்துழைப்புடனும் ஆதரவுடனும் 5 வருடங்களைக் கடந்தும் எனது பணி தொடர்கின்றது. இன்னும் இவ்வாறான ஒத்தாசைகளை வழங்கி இச்சிறார்களை வளர்த்தெடுக்க வேண்டியது எல்லோருக்குமுரிய தார்மீக கடமை என்பதையும் வலியுறுத்தி எல்லாவற்றுக்கும் துணை நிற்கும் கண்ணகி அம்மனே அருள்புரிய வேண்டும் என்றும் வணங்கி உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி

**பாடசாலை என்பது வெறுமனே**
**புத்தகக்கல்வியை**
**வழங்கும் நிறுவனமல்ல**

## பாடசாலை ஆசிரியர்களும், சர்வ மத முன்பள்ளி ஆசிரியர்களும்



## பாடசாலை மாணவர்கள் 2017





## ஆசிச்செய்தி

புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ்க்கலவன் பாடசாலையானது 80 வருடங்களை கடந்து தொடர்ந்தும் அதன் பாதையில் பல இடர்களின் மத்தியிலும் பயணிப்பதையிட்டு புங்குடுதீவிலும், இலங்கையிலும், சர்வதேசத்திலும் உள்ள பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எல்லோருமே ஆனந்த மகிழ்ச்சியில் திகழ்வார்கள் என்றால் மிகையாகாது. புங்குடுதீவு கண்ணகி அம்மன் என அழைக்கப்படும் இராஜராஜேஸ்வரி அம்பாளின் துணை கொண்டு புங்குடுதீவில் உள்ள புத்திஜீவிகளால் புங்குடுதீவு வீராமலைப்பகுதியில் ஒரு ஆரம்பப்பாடசாலையை 1937 ஆம் அண்டு நிறுவினார்கள். ஆரம்பத்தில் கொட்டில்களால் நிறுவப்பட்ட பாடசாலை இப்பிரதேச மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கியது. இப்பகுதி மாணவர்கள் இங்கு ஆரம்ப கல்வியை கற்று பின் கணேசா கனிஸ்ட மகாவித்தியாலயத்திலும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும், யாழ்ப்பாண பாடசாலைகளிலும் கல்வி கற்று சிறந்து விளங்கினார்கள். பாடசாலையின் வளர்ச்சிப்பாதையில் அரச ஆதரவும், மக்களின் ஆதரவினையும் பெற்று பாடசாலை மெல்ல மெல்லவென தன் பாதையில் அடியெடுத்து வைக்கத்தொடங்கியது. பாடசாலையில் நாளுக்கு நாள் மாணவர்களின் எண்ணிக்கை கூடத் தொடங்க 1975 பகுதிகளில் இந்த வீராமலைப்பகுதிக்கு இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டியை பயணிக்கச் செய்வதில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ கா.பொ.இரத்தினம் அவர்கள் பாடசாலையையும் கருத்தில் கொண்டமை இங்கு குறிப்பிடவேண்டியது. இத்தீவின் வரலாற்று விழுமியங்களை தன்னகத்தே சுமந்து வந்த பாடசாலை 1991 ஆம் ஆண்டு இடம்பெயர்வுடன் தனது தனித்துவத்தை இழந்தது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர், மக்கள் இல்லாத சூனியபிரதேசமாக இருந்த இடத்தை இவ்விடம் தான் என்ற குறியீட்டுக் காட்டிக்கொண்டு பின்

பாடசாலைக்கு அதிபர் திரு க. ஸ்ரீதரன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு வந்திருந்து சேவையை தொடருவது ஒரு நல்ல சூழ்நிலையைத் தந்திருக்கிறது. உண்மையிலேயே எந்தவித வசதியுமல்லாமல் இருந்த பாடசாலைக்கு மின்சார வசதி, கணணி வசதி, மைதானம் புனரமைத்தல், நவீன வசதிகளுடன் மலசலகூடம் என்பன அமைக்கப்பட்டு பாடசாலையை வளமிக்கதாக கொண்டு சென்று மாணவர்களை கல்விச்சுற்றுலாவிற்கு கூட்டிச் சென்று மிகக்குறைந்த மாணவர்களை கொண்ட சூழ்நிலையில் பாடசாலை விளையாட்டு போட்டியை நடாத்தி முடித்தது மிகப்பெரிய கைங்கரியமாகும். இப்பாடசாலை வீறுநடை போட்டு அதன் வளர்ச்சியில் மெல்ல மெல்ல நடை பயணிக்கிறது.

வெளிநாடுகளில் இருக்கும் பழைய மாணவர்களின் ஊக்குவிப்பு மிகவும் உன்னதமானது. பாடசாலைக்கு சரஸ்வதி சிலை நிறுவுவதற்கு அதிபர் எடுத்த முயற்சிக்கு உடனடியாக செய்து முடித்து கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் பங்கு பாடசாலையின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் மிக உன்னதமாகவிருக்கிறது. பழைய மாணவர்கள் இப்பாடசாலைக்கு வந்ததும் அவர்களின் நினைவுச்சின்னங்கள் அந்த வகுப்பறை, கிணறு, மரம், மதில் அதிபர் அவர்கள் இந்த ஊரைச் சேராவிட்டாலும் அவருடைய பங்களிப்பு சரித்திரத்தில் எழுதப்படவேண்டியது.

தனி ஒருவராக நின்று குறைவான ஆசிரியர்களுடன் சாதித்துக் காட்டி வரும் அதிபருக்கு பாடசாலைச் சமூகமாகிய நாங்கள் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல தீவக வலயப்பணிப்பாளர் அவர்களின் பங்கு மிக உன்னதமானது. அவருடையதும் அவர்தம் தீவக வலயத்தினரும் மிகப்பெரும் பங்காற்றியதால் இப்பாடசாலை இன்று தலைநிமிர்ந்து வளருகிறது. என்ன கேட்டாலும் தயங்காது வளர்ந்து வரும் பாடசாலைக்கு அவர்கள் தங்களால் ஆன பணியைச்

செய்கிறார்கள். அந்த வகையில் பாடசாலைச்சமூகம் அவர்களுக்கும் நன்றியறிதலுடையதாகவிருக்கிறது.

எல்லாவற்றுக்கு மேலாக ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாளின் கருணையும், அருளும், கடாச்சமும் இருக்கும் வேளையில் மிக வீறுகொண்டு பாடசாலை வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை.

வைத்திய கலாநிதி கணேஸ் ஸ்ரீதரன்
11ஆம் வட்டாரம், புங்குடுதீவு

**பாடசாலைக் காலத்தில் பாடசாலையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியதை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது எதிர்கால வாழ்க்கையை இழந்துவிடுவர்**



# வாழ்த்துச் செய்தி

அன்னியர் ஆட்சியில் அவர்கள் தம் பண்பாடு சார்ந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்ட முறைசார் கல்விச் செயற்பாடுகளிலிருந்து பௌத்த இந்துப் பெரியார்கள் தம் மதம், மொழி பண்பாடுகளை நிலைநிறுத்தும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டவை தான் பௌத்த சைவப் பாடசாலைகளாகும். அந்த வகையில் புங்குடுதீவில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை கணேச வித்தியாலயமாகும். அதனைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றான இராஜஇராஜேஸ்வரி கனிஷ்ட வித்தியாலயத்தினை அமரர்களான வைத்திலிங்கம், கண்ணையா, நீ.சேதுபதி, சின்னத்தம்பி போன்றோரின் முயற்சியனால் 1937ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. துரதிஸ்டவசமாக 1938 ல் சூறாவளித் தாக்கத்தினால் தரைமடடமாக்கப்பட்டது. அதே ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையாளர் அமரர் இராசரத்தினம் அவர்களின் உதவியுடன் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது அதிபராக அளவெட்டியூர் விஸ்வநாதன் அவர்கள் கடமையாற்ற அவரின் தலைமையிலும் பின்னாட்களிலும் அமரர்களான நீ.சேதுபதி, சி.சின்னத்துரை, வை.கணபதிப்பிள்ளை, நீ.ஆறுமுகம் போன்றோரின் அர்ப்பணிப்பின் பயனாக இப்பாடசாலை வளர்ச்சி பெறலாயிற்று. இவர்களைத் தொடர்ந்து பலர் அதிபர்களாகவிருந்து பணியாற்றிய நிலையில் இங்கு கற்ற மாணவர்கள் உள்நாட்டிலும், சர்வதேசங்களிலும் உயர்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

1991ம் ஆண்டு புங்குடுதீவு கிராம மக்களின் ஒட்டுமொத்த இடப்பெயர்வோடு பாடசாலை செயற்பாடுகளும் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர வேண்டியேற்பட்டது. 1996 ல் மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இப்பாடசாலை சூழலில்

மாணவர்களிலில்லாத நிலையில் ஆரம்பிக்கப்படவில்லை. இருப்பினும் இக்கிராமப் பெரியோர்களின் முயற்சியின் பயனாக 2013 ம் ஆண்டு மீள் ஆரம்பிக்கப்பட்டு அதன் அதிபராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.க.ஸ்ரீதரன் அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றார்.

இராஜராஜேஸ்வரி கனிஷ்ட வித்தியாலயத்திற்கு இவ்வாண்டு 80 வயதாகின்றது. இந்நிகழ்வினை உணர்வு பூர்வமாக கொண்டாட வேண்டுமென கிராமத்து மக்களும், பாடசாலை சமூகமும் எடுக்கும் விழா சிறப்புறவும் அதனை நினைவு கூரும் வகையில் வெளியிடப்படும் மலர் சிறக்கவும் எனது மட்டற்ற மகிழ்ச்சியுடன் கூடிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கிராமத்தில் பிரசித்தி பெற்ற கண்ணகை அம்மன் பெயருடன் கல்விப்பணி செய்து வரும் இப்பாடசாலை பல நூற்றாண்டுகள் மாணவரின் கல்வி வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல இராஜராஜேஸ்வரி அம்பாள் அருள்பாலிப்பாராக.

கலாநிதி.கா.குகபாலன்
ஓய்வுநிலைபேராசிரியர்
துறைத்தலைவர்
புவியியற்றுறை
யாழ் பல்கலைக்கழகம்

**நாம் உண்ணாமல் சேர்த்து வைத்திருக்கும் உணவு பசித்திருப்போரின் பங்காகும்**

**– புனித பசிலியார்**

## அமுத தாயே நீடித்து நிலைத்து வாழ்க!



இலங்கையின் சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி அம்பாளின் அருட்கடாட்சத்துடன் கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் வித்தியாலயம் அமுதவிழாவினை கொண்டாடுவதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். புங்குடுதீவு கிராமம் கல்வி, விவசாயம், வியாபாரம், மீன்பிடி முதலான துறைகளூடாக பொருளாதாரத்துறையில் மேலோங்கிய கிராமம். செல்வச் செழிப்புடன் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்த காலத்தில் அறியாமை இருளை நீக்கி கல்வி ஒளியை மக்கள் மத்தியில் ஏற்படுத்த 1937ல் "இராஜராஜேஸ்வரி வித்தியாலயம்" தோற்றுவிக்கப்பட்டது.

எண்பது ஆண்டுகள் கல்விப்பணி ஆற்றி நடந்து வந்த பாதையில் 1991 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பேரனர்த்தம் புங்குடுதீவு கிராமத்தையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்ததால் இவ்வித்தியாலயமும் தன் மாணவச் செல்வங்களை இழந்தது; பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது.

1997 ஆம் ஆண்டைத் தொடர்ந்து படிப்படியாக மக்கள் இப்பகுதியில் மீள குடியமரத் தொடங்கியதைத் தொடர்ந்து 2013 இல் இராஜேஸ்வரி வித்தியாலயத்தை மீள ஆரம்பிக்கும் சூழல் உருவானது. இதே காலத்தில் தான் நானும் தீவக கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டேன்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்" (குறள் 517)

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய இராஜராஜேஸ்வாரி வித்தியாலயத்தை மீள இயங்குநிலையில் செயற்படுத்தக்கூடிய

ஆற்றலும் திறமையும் மதிநுட்பமும் நிரம்பிய துடிப்பு மிக்க இளம் அதிபரான திரு கந்தசாமி ஸ்ரீதரன் அவர்களை அப்போதைய வலயக் கல்விப்பணிப்பாளரான திரு.ஜோன் குயின்ரஸ் அவர்கள் தெரிவு செய்து மேலதிகாரிகளின் அனுமதியுடன் அதிபராக நியமித்தார்.

பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட நாளன்று சொற்ப மானவர்களுடன் சமூகத்தின் ஒத்துழைப்போடு கால்கோள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. அதன் பின்னர் கடமையின் நிமித்தம் இப்பாடசாலையை எனது சேவைக் காலத்தில் பல தடவைகள் தரிசித்துள்ளேன். பாடசாலையில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையைப் பற்றியும் தனித்தனியாக அறிந்து அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் அதிபர், ஆசிரியரைக் கண்டேன். சிக்கல்கள், பிரச்சினைகள் நிரம்பிய குடும்ப பின்னணிகளைக் கொண்ட பிள்ளைகளையும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வகுப்பறையில் உள்ளடக்கி, பாடசாலை செயற்பாடுகள் இயன்ற வரை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

கல்வித் தெய்வத்தை நிலைநிறுத்தி சரஸ்வதி திருவுருவம் அமைக்கப்பட்டது. மாணவர்களின் உடல், உள ஆற்றல்களை வளர்க்க வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன. பாடசாலைக்கான பௌதீக வள தேவைகள் பல பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இன்று அமுதவிழா மலரும் வெளிவருகின்றது. வசதி வாய்ப்புக்கள் குறைந்த பெற்றோரின் சொற்ப எண்ணிக்கையான பிள்ளைகளை உள்ளடக்கி செயலாற்றும் இராஜராஜேஸ்வரி ஆரம்ப பாடசாலையின் இத்தகு செயற்பாடுகள் எனது பார்வையில் இமாலய சாதனைகளாகவே நோக்கப்பட வேண்டியவை. ஒரு பாடசாலையின் எழுச்சியும் வீழ்ச்சியும் அதிபரின் தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ள தென்பதற்கு அதிபர் தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ள தென்பதற்கு அதிபர் ஸ்ரீதரன் நல்லதோர் முன்னுதாரணமாகும். அவருக்கு எனது தனிப்பட்ட வாழ்த்துக்கள்.

பாடசாலையின் மாணவர் தொகை அதிகரித்து இப்பாடசாலை நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடி மகிழ இராஜராஜேஸ்வரி அம்பாளை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். இறுதியாக அமுதவிழாவை கொண்டாடி வரலாற்று ஆவணமான மலர் ஒன்றினையும் வெளியிடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு விழா நிகழ்வுகள் சிறக்க இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

அமுத தாயே வாழ்க!

இ.குணநாதன்,
ஓய்வுநிலை பிரதி கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்
தீவகம்

**விழுந்தவனுக்குத் தான் எழும்பும் அனுபவம் கிடைக்கிறது**



# வாழ்த்துச் செய்தி

14.10.1937 புங்குடுதீவுக் கிராமத்தில் வீராமலை என்கின்ற பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. யா/புங்குடுதீவு இராஜ ராஜேஸ்வரி வித்தியாலயமாகும். இப்பாடசாலை யானது எண்பதாவது அகவையில் மீளப் புத்துயிர் பெற்றுள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது. அதற்கு மேலாக இப்பாடசாலை அமுதவிழாக் காணும் இவ்வேளையில் பாடசாலைச் சமூகத்தினரால் வெளிவர இருக்கின்ற “அமுதமலர்” எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண போர்ச் சூழலினால் 1991இன் நடுப்பகுதி முதல் இப்பாடசாலை இயங்க முடியாமல் போயிற்று பல இன்னலுக்கு மத்தியிலும் புங்குடுதீவு கிராமம் உட்பட தீவக பிரதேச மக்கள் இடம்பெயர் வேண்டிய நிலை ஏற்பட்டது பின்னர். 2013 ஆம் ஆண்டு மீளவும் இப்பாடசாலை இயங்க ஆரம்பித்து கல்விச் செயற்பாடுகள் தொடர்ந்தன. எனது முதல் நியமனப் பாடசாலையாக இது விளங்கியதனால் எனது குல தெய்வத்தின் நாமத்தை உடைய பாடசாலைக்கு நியமிக்கப்பட்டதையிட்டு மிக்க ஆனந்த பரவசம் அடைந்தேன். தொடர்ந்து எனது நியமனத்தின் வினைதிறனை மேம்படுத்த ஆசிரிய பயிற்சிக்காக 04.04.1991 முதல் நியமனம் பெற்று பயிற்சிக்காக சென்றுவிட்டேன். இதன் காரணமாக பாடசாலைச் சமூகத்தினரால் பிரிவுபசார விழாவும் சிறப்பாக கொண்டாடி மகிழ்வித்தார்கள். யான் எனது ஏற்புரையில் எனது ஆசிரியர் பயிற்சியை ஈராண்டு காலப் பகுதியில் வெற்றிகரமாக நிறைவு செய்து மீளவும் இப்பாடசாலைக்கு நியமனம் பெற்று மேன்மேலும் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைப்பேன் என எடுத்துக் கூறினேன் ஆனால் அதற்கு இறைவன் கைகொடுக்க முடியாமல் போனதையிட்டு

மனம் வருந்துகின்றேன் இருந்த போதிலும் இப்பாடசாலை ஆரம்ப ஆசிரியர் என்கின்ற நிலையில் நியமனத்தை ஏற்றுக் கொண்டமையினால் அதன் பெறுபேறாக இன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராக பணியாற்றுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தற்போதய சூழ்நிலையில் இப்பாடசாலையில் பணியாற்ற முடியாமல் போனாலும் அதற்கு மேலாக ஆசிரிய பயிற்சி கலாசாலையில் என்னிடம் பயின்ற ஆசிரியர்களே அநேகர் பணியாற்றுவதனால் அது மேலும் வலுச்சேர்கின்றது.

எனவே இன்றைய இந்தச் சூழ்நிலையில் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலையை அதிபர் பொறுப்பேற்று நடத்தி வரகின்ற திரு. க. ஸ்ரீதரன் அவர்களும் அவர்களுடைய எனைய தூண்களாகவிளங்கி வருகின்ற ஆசிரியர்களையும் மதிப்போடு பாராட்டுகின்றேன். பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் உடல், உள அர்ப்பணிப்போடு இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு அ'ரும்பணி ஆற்றி வருகின்றமையை இச் சமூகத்தினர் பாராட்டுதல் வேண்டும். புங்குடுதீவு வாழ்மக்கள் பலர் புலம்பெயர்ந்த நாடுகளில் பல உதவிகளை இப்பாடசாலைக்கு ஆற்ற முன்வருகிறார்கள் என்ற செய்தியையும் நன்கு அறிவேன்.

ஆகவே இம்மண்ணை நேசிக்கின்ற இம்மக்களின் சொத்தாக விளங்குகின்ற இப்பாடசாலையின் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் இத்தகைய இணைபாடவிதான நிகழ்வுகளினூடாக நல்லதொரு தொடர்பாடல்களை ஏற்படுத்தி நாட்டுக்குகந்த நல்ல பிரசைகளை உருவாக்க முயற்சித்திருக்கின்ற இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு அகவை 80 இல் கால்பதித்திருக்கின்ற இப்பாடசாலையின் அமுதவிழாவினை முன்நிறுத்தி வெளிவருகின்ற

"அமுதமலர்" எனும் நூல் வெளியீட்டுக்கு உழைத்த அத்தனை நல்லுள்ளங்களையும் பாராட்டி வாழ்த்துக் கூறி விடை பெறுகின்றேன்.

"என் கடன்பணி செய்து கிடப்பதே"

வீ.கருணலிங்கம்
அதிபர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

# கல்விக்கு வறுமை ஒரு தடையல்ல



# சிறுவர்களின் உரிமைகளைப் பேணிக்காப்போம்

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் தாபன ஒப்பந்தத்தில் 54 உடன்படிக்கை முடிவுகள் காணப்படுகின்றன. இதன்படி 18 வயதிற்கு உட்பட்ட ஒவ்வொரு நபரும் சிறுவராகக் கணிக்கப்படவேண்டும். இந்த ஒப்பந்தத்திலுள்ள உரிமைகள் உலகிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் உண்டு. ஒரு நாடானது தனது நாட்டிலுள்ள சிறுவர்களின் குடும்ப நிலை, குடும்ப நடவடிக்கைகள், குடும்ப நம்பிக்கைகள் என்பன சார்ந்த எந்தவிதப் பாகுபாடு தண்டனைகளிலிருந்தும் பாதுகாக்கக் கடப்பாடுடையது. ஒவ்வொரு சிறுவருக்கும் சுதந்திரமாக வாழ்வதற்கான வாழ்வியல் உரிமை உண்டு.

ஆனால் இன்று அனேகமாக சிறுவர்களின் வாழ்வியல் உரிமைகள் கேள்விக் குறியாகக் காணப்படுகின்றன. கல்வி கற்பதற்கான உரிமை சகல சிறுவர்களுக்கும் உண்டு. ஒவ்வொரு நாடும் இலவசமானதும், கட்டாயமானதுமான ஆரம்பக்கல்வியை தமது சிறுவர்கட்கு வழங்கவேண்டும். மேலும் மனித கௌரவத்தினை வெளிப்படுத்தக்கூடிய ஒழுக்கம் இருப்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும். இவ்விதமாக கல்வி தொடர்பாக சிறுவர்களுக்குரிய உரிமைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டும் பல சிறுவர்கள் கல்வி வாசனையின்றிக் காணப்படுகின்றனர்.

குடும்பநிலை, பெற்றோரின் கல்வியறிவின்மை போன்ற பல காரணங்களால் ஆரம்பக்கல்வியைக் கூடத் தொடர முடியாத நிலையில் பல சிறுவர்கள் காணப்படுகின்றனர். எமது பிரதேசத்திலும் இந்நிலை காணப்படுகின்றது. சற்று மாறுபட்ட நிலையில் இது காணப்படுகின்றது. பெற்றோரின் கல்வியறிவின்மை, குடும்பப்பிரிவுகள்,

மதுப்பாவனைகள், சச்சரவுகள் போன்ற பல காரணங்களால் பாடசாலையில் மகிழ்வாக கற்று வீடு செல்லும் பிள்ளையின் மனோநிலை மாற்றமடைகின்றது. இந்நிலை தொடருமானால் எதிர்கால சமூகம் பாரிய நெறிபிறழ்வான ஒரு சமூகத்தை உருவாக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

அனேக பிள்ளைகளுக்கு உளத்தாக்கம் அடையும் நிலை அதிகமாக ஏற்படுவதால் அவர்களுக்கு நெகிழ்வான உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளின் பின்பே கற்பித்தலைத் தொடர வேண்டிய நிலை உள்ளது. இந்நிலை மாற வேண்டும் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் தமது கண்கள் என நினைத்து அவர்களின் வளர்ச்சியில் அக்கறை செலுத்த வேண்டும்.

எமது கல்விச்சாலைச் சூழல் இனி வருங்காலங்களில் ஏனைய சமூகங்களுக்கு ஒரு முன்னோடியான சமூகமாக விளங்கவேண்டும். எனவே இம் மாணவர்களின் நலனில் எங்களுடன் பெற்றோர், நலன் விரும்பிகள், புலம்பெயர் எம் மக்கள் அனைவரும் கைகோர்த்து இணைந்து செயற்படுவோமாக.

திருமதி சா. கேதீஸ்வரன்
ஆசிரியை

**தரையிலே தூங்குபவன் தவறியும் விழுவதில்லை**

## மனதார வாழ்த்துகின்றேன்



சைவமும் தமிழும் தம்மிரு கண்களெனப் போற்றி வாழ்ந்த பெருமக்கள் வாழ்ந்த பூமி புங்குடுதீவு. இப்பூமியின் தென்கிழக்குப் பகுதியில் வெகு சிறப்போடு வீற்றிருந்து அருள் பாலித்து அடியார்கள் அன்பை ஈர்த்திழுக்கும் ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்மன் என வழங்கும் கண்ணகி அம்மனின் பெயரோடு விளங்கும் ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி வித்தியாலயமானது 1935ம் ஆண்டு அப்பகுதியில் வாழ்ந்த தன்னலம் கருதாப் பெரியவர்கள் வரிசையில் அமரர்கள் வைத்திலிங்கம், கண்ணையா, சின்னத்தம்பி ஆகியோரின் விடாமுயற்சியின் பயனாக தற்காலிக ஓலைக்கூடாரத்தில் 1937ம் ஆண்டு விஜயதசமி நன்னாளில் சிறார்களின் ஏடு தொடக்கல் வைபவத்துடன் கல்வி ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்வி ஆரம்ப வகுப்புக்களில் தொடர்ந்த அத்தருணத்தில் புயலுடன் கூடிய சுழல் காற்றுக் காரணமாக கூடாரம் சிதைவுற்றது. அங்ஙனம் சிதைவுற்றாலும் கிராம மக்களின் விடாமுயற்சியின் பயனாக மீண்டும் ஓர் உறுதியான கட்டடம் அமைக்கப்பட்டது. அத்தோடு 1938ம் ஆண்டு காலப்பகுதியின் அமரர் சின்னத்துரை ஆசிரியர் அவர்களின் முயற்சியின் காரணமாகவும், சைவ விருத்திக்கான அபிவிருத்தி சங்க முகாமையாளர் அமரர் இராசரெத்தினம் அவர்களின் பேராதரவுடன் 1944ம் ஆண்டு உதவி பெறும் சபையின் நிலைக்கு பதிவாகியது.

1962ம் ஆண்டு இப்பாடசாலை அரசுடமையாக்கப்பட்டது. அன்றிலிருந்து துரித வளர்ச்சி அடைந்தமை குறிப்பிடத்தக்க தொன்றாகும். அவ்வேளை கல்வி கற்கும் மாணவர்கள் தொகை அதிகரித்த நிலையில் இடப்பற்றாக்குறை ஏற்படவே 10ம் வட்டாரத்தில் வாழ்ந்த பெருமகன் அமரர். தா. கிருஷ்ணசாமி அவர்களால் அதே இடத்தில் காணியொன்று அன்பளிப்பாக வாங்கிக் கொடுக்கப்பட்டதுடன்

பெற்றோர்கள், நலன் விரும்பிகள் போன்றோரின் உதவியுடனும் பாதுகாப்பான சுற்று மதிலுடன் கூடிய பாடசாலையாக விஸ்தரிக்கப் பட்டது.

தொடர்ச்சியாக அன்னைத்தமிழுடன் கல்வி, கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட மக்களுடன் கூடிய பாடசாலையாக முழுமை பெற்றது.

அன்றிலிருந்து மாணவர் தொகையும் படிப்படியாக கூடி நல்லதொரு தரத்துடன் 1 தொடக்கம் 5 வரையுள்ள கல்விக்கூடமாக மிளிர்ந்தது. கல்விப் பெறுபேறுகளும் தரம் மிக்கதாக வளர்ந்து கொண்டே வந்தது.

நான் கல்வி கற்ற காலப் பகுதியிலும், அதற்கு முன்பும் இப்பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் வரிசையில் அமரர்கள், அதிபர் கணபதிபிள்ளை, அதிபர் நடராஜா, ஆசிரியர்கள் அமரர் சின்னத்துரை, அமரர் சதாசிவம், அமரர் இராசரெத்தினம், தனிநாயகம் ஆங்கில ஆசிரியர் அமரர் இமானுவேல், ஆசிரியை திருமதி. சிவகாமி. நல்லம்மா ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

எந்தத் தடைகளுமின்றி இயங்கிக் கொண்டிருந்த பாடசாலை 1990ம், 1991ம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கிராம மக்களின் இடப்பெயர்வு காரணமாக தொடர்ந்து இயங்க முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது. தற்போது பாடசாலையானது மறுசீரமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் நடைபெறுவதையிட்டு மனம் புளகாங்கிதம் அடைகிறது.

பாடசாலையானது, மீண்டும் மீளத்திறக்கப்பட்ட வேளையில் அதிபர், அமரர் திருமதி மகாலிங்கம் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கேட்டதற்கிணங்க கால்கோள் விழாவிற்கான பணவுதவியைச் செய்ததில் மகிழ்வேய்தினேன்.

தற்போதும் என்னாலான உதவியைச் செய்வதிலும் பெரும் களிப்படைகிறேன். மீண்டும், மீண்டும் செய்ய வேண்டுமென ஆவலுடையவளாகவும் இருக்கின்றேன் எனது கிராம மக்களின் எதிர்காலச் சந்ததியினரின் கல்வி மேம்பட வேண்டுமென இராஜேஸ்வரி அம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

கல்வி என்பது காலத்தால் அழியாத சொத்து ஒரு தனிமனிதனை சமூகம், கிராமம், பிரதேசம், தேசம் ஏனைய உலகமே போற்றவும் தலை வணங்கவும் தேவையான இக்கல்விச் சொத்தினை புங்குடுதீவு கிராமத்தில் மேன்மேலும் வளரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

மாணவர் சமுதாயத்திற்கு கல்வி எவ்வளவு முக்கியமோ, அதே போல் பாடசாலை பௌதீக வளங்களும் முக்கியதொன்றாகும். இவ்வளங்கள் இப்பாடசாலையின் தேவையை நிறைவு செய்ய வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

நாம் ஆலம் விழுதினைப் போல் ஆயிரக்கணக்கானோர் இந்த கிராமத்தில் பிறந்து, தவழ்ந்து, விளையாடி, கல்வி கற்று வாழ்ந்த எம் தாய் மண்ணை பொக்கிஷமாக நெஞ்சில் பதித்த அந்தப் பசுமையான நினைவுகளையும், அந்தப் புண்ணிய பூமியையும் மறக்க முடியுமா? இல்லை, இல்லை அவை எம் நெஞ்சில் பதிக்கப்பட்ட கற்சிற்பங்கள் என்றால் மிகையாகாது.

என்னைச் சார்ந்த சமூகத்திற்கு எந்தவொரு வகையில் உழைக்கலாம் என்ற தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றேன்.

நான் ஆரம்பத்தில் மாணவியாகிக் கால் பதித்து கல்வி பயின்று, உயர் கல்வியை புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நிறைவு செய்து, 1980ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து தொடர்ந்து 10 வருடம் ஆசிரியையாகக் கடமையாற்றிய வேளை தாய்மொழிக் கல்வியையும், எமது கலாச்சார விழுமியங்களையும் எம் சிறார்களுக்கு கற்றுக் கொடுத்து நற்றமிழை மேம்படுத்தவும் உறுதியுடன் செயற்பட்டேன்.

அங்கே, கல்விகற்ற மாணவர்கள், கல்வித்துறையிலும், தொழிற் நுட்பத்திலும், இன்னும் எத்தனையோ துறைகளிலும் உயர்வடைந்துள்ளனர். இது இன்னும் வளர வேண்மென அங்கு சேவைபுரியும் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். நல்லதை எண்ணுங்கள், நல்லதையே செய்யுங்கள் அதற்கு என்னாலான ஒத்துழைப்பு வழங்க முன்வருகின்றேன்.

நாம் செய்யும் ஒவ்வொரு நற்செயல்களும் இறைவனுக்கு பூஜை நேரத்தில் சாத்தப்படும் மலர்களாக உருவெடுக்கும், என்பது ஆன்றோர் வாக்கு. அந்த வகையில் சேவை மனப்பான்மையுடையவர்கள், அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து செயலாற்றி எதிர்காலத்தில் இப் பாடசாலை மாபெரும் விருட்சமாக வளர வேண்டுமென கிராம மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.


இப்பாடசாலையின் 80வது ஆண்டு பூர்த்திவிழாவும், பரிசளிப்பு விழாவும் சிறப்புற நடைபெற மனதார வாழ்த்துகின்றேன். நேரில் வந்து பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்காததையிட்டு மனவேதனை யடைவதுடன், சந்தர்ப்பம் சூழ்நிலை கிடைக்கப் பெறும் பட்சத்தில் அங்கு வருகை தந்து என்னாலான உதவியைச் செய்யக் காத்திருக்கின்றேன் என்பதையும் அறியத் தந்து இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்பதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

நன்றி

கனகசபை மகாலெட்சுமி
முன்னாள் ஆசிரியை
புங்குடுதீவு10ம் வட்டாரம்
பிரான்ஸ்

**“பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும்**
**நற்றவானிலும் நனி சிறந்தனவே”**

# அரங்க ஆற்றுகை



# வகுப்பறை





## மலர் ஒன்று மலர்கின்ற நாளில் ஆண்டொன்று சாதனையாகி சரித்திரமாகின்றது......



கருவறையில் பத்துத் திங்கள் உறைந்த நாம் பள்ளியறையில் பன்னிரண்டு ஆண்டுகளாய் கால் தடம் பதித்து வந்துள்ளோம். எம் கால் தடம் இன்று அங்கு இல்லாவிட்டாலும் நாம் ஓடித்திரிந்த பசுமையான நினைவுச்சுவடுகள் நாம் கற்ற பள்ளியிலே இன்னும் இருக்கும். அந்த வகையிலே புங்கைமண்ணில் அறிவை பெருக்கவும், சமூகத்தைக் கூட்டவும், கல்விப்பாட தரங்களை பிரிக்கவும், ஒழுக்கங்களை வகுக்கவும் துன்பங்களை கழித்து இன்பத்தைக் கொடுக்கும் சிறந்த சாலையாக திகழ்கிறது புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி பாடசாலை.

சின்னஞ்சிறிய மொட்டுக்களைக் கொண்டு சிறிய பள்ளிதனிலே பாடம் நடாத்திவருவது பாராட்டத்தக்க விடயமாகும். ஒவ்வொரு வெற்றிக்கும் பின் ஏதோ ஒரு சக்தி இருக்கும். அந்த வகையில் எங்கள் பள்ளியின் முன்னேற்றத்திலும் மழலைகளின் ஊக்குவிப்பிலும் இராஜராஜேஸ்வரி அம்மனே சக்தியாக இருந்து அதன் நாமம் கொண்டு சிறப்பாக நடாத்திச் செல்கிறாள் என நாம் எண்ணுகின்றோம்.

அது மட்டுமல்லாது மாணவர்களை வெறுமனே புத்தகப் பூச்சிகளாய் வளர்க்காது வெளி உலகையும் பார்வையிட வேண்டும், உலக விடயங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு மாணவர்களை கல்விச் சுற்றுலா ஒன்றிற்கு கூட்டிச்சென்றது. உண்மையிலே வரவேற்கத்தக்க ஓர் விடயமாகும். இந்த கல்விச்சுற்றுலா மூலம் அங்கு கற்பிக்கின்ற ஒவ்வொரு

ஆசான்களின் எண்ணமும் மாணவர்களை வளர்க்க வேண்டும் என்பதையே கட்டிக்காட்டுகிறது.

அத்தோடு எம் ஊர் மாணவர்களின் கல்வியறிவை வளர்க்க வேண்டும் என்பதற்காக தொலைதூரத்தில் இருந்து வந்து பசி பட்டினி மறந்து அன்போடு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் இப்பாடசாலையில் தான் இருக்கின்றனர் என்றுதான் கூற வேண்டும். கல்வி கற்கும் மாணவர்களின் தேவையறிந்து அதன் மூலமே நாம் செயற்பட்டால் நற்பிரஜை தன்னை உருவாக்கலாம். அந்த வகையிலே எமது வட இலங்கை சர்வோதய நிறுவனத்தினூடாக இலண்டன் புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தின் இளைஞர் அணியினரால் கற்றல் உபகரணங்களும், கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரால் குடிநீரும் இன்று வரை வழங்கியும் மாணவர்களை ஊக்கப்படுத்தி யுள்ளோம் என்பதை இங்கு குறிப்பிடுவதில் மகிழ்வுறுகின்றோம்.

காலங்களும் மாற மாற்றங்களும் வரவேண்டும். இராஜராஜேஸ்வரி பாடசாலையிலே உட்கட்டுமானப்பணிகள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும். இது இங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டை மேம்படுத்த நல்ல வசதியளிக்கும் ஒரு பாடசாலை திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன. ஆகவே எம் ஊர் மாணவர்களை சிறந்த ஒழுக்கத்தோடு நல்ல பண்போடும் வளர்த்தெடுக்க இப்பாடசாலையின் அதிபர் திரு. க. ஸ்ரீதரன் அவர்களின் அளப்பரிய ஊக்குவிப்பும் விடாமுயற்சியும் பாராட்டத்தக்க ஒன்றாகும். எட்டாண்டு கண்டுவந்த பள்ளி இன்று எண்பது ஆண்டுகள் காண்கின்றதென்றால் அது எம் மூதாதையர் கற்ற பள்ளியாகத் தான் இருக்க வேண்டும். இந்த பள்ளியானது இன்னும் எண்ணாயிரம் ஆண்டுகளைக் கடந்து எட்டுத்திக்கும் புகழ் பரப்ப வேண்டும்.

அத்தோடு இக்கல்விச் சோலையில் மலர் ஒன்று மலர்கின்றது. ஆனால் இம் மலரிலே பொதிந்திருப்பது அங்கு கற்ற, கற்கின்ற

மாணவர்களின் உள்ளத்திலே எழுந்த உள்ளக் கிடக்கைகள் ஆகும். அத்தனை எண்ணங்களையும் ஒன்று சேர்க்கும் வண்ணமாக இன்று மலர் வெளியீடும் அதனூடே 80 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இரட்டி மகிழ்வாக நடைபெறுகிறது. இவ்விழாவினைப் போல் பல்வேறு நிகழ்வுகளும் விழாக்களும் புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி பாடசாலையிலே நிகழ்ந்தேறி அரங்கேற வேண்டும். அவ்வாறு அரங்கேறினால் இன்னும் எண்பது ஆண்டுகளில் எண்ணாயிரம் கல்விமான்களையும் எண்ணூறு ஆசான்களையும் எண்ணமதில் உருவாக்கலாம் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

அரும்பாகி மொட்டாகி வளர்ந்த இப்பள்ளியிலே பறவைகளும் வந்து இசைபாடிச் செல்லும் எண்பதாண்டு நிறைவு விழா சிறக்கவும் மலர் வெளியீடு மலர்ந்து மணம் பரப்பவும் தேளோடு தோள் கொடுத்து பாடுபட்டு உழைத்த பாடசாலை முதல்வர், ஆசிரியப் பெருந்தகைகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர். பெற்றோர். ஆசிரியர் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் தீவகக்கல்வி வலயத்தினர் எல்லாவற்றிற்கும் மேலாக மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல சிவயோக சுவாமிகளின் நல்லாசி வேண்டி பிரார்த்தித்து வாழ்க வளமுடன் என வாழ்த்தி நிற்கின்றோம்.

**"ஊழி தோறூழ் நீடுழி வாழி"**

நன்றி

| | |
|---|---|
| பொ.ஜமுனாதேவி | க.புஸ்பராணி |
| அறங்காவலர் | நிலையப் பொறுப்பாளர் |
| வடஇலங்கை சர்வோதயம் | வடஇலங்கை சர்வோதயம் |



# வாழ்த்துச் செய்தி

யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி வித்தியாலத்தின் எண்பதாவது அகவை நிறைவில் சின்னஞ் சிறார்களின் ஆக்கத்துடன் வெளியிடப்படுகின்ற "அமுதமலருக்கு" வாழ்த்துரை வழங்குவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்

இப்பாடசாலையானது 1937ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கல்விப்பணியில் சிறந்து விளங்கிய பாடசாலையாகும். பின்னர் 1991ம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்கள் புலம்பெயர்ந்தமையினால் மூடப்பட்டு மீண்டும் 2013ம் ஆண்டு அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்பாளின் அரும்பெரும் கருணையால் தனது கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பித்தது. மீள ஆரம்பிக்கும் போது தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற அதிபர் திரு.க.ஸ்ரீதரன் அவர்களின் அயராத முயற்சியினாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையினாலும் மிகக்குறைந்தளவிலான மாணவர்களுடன் ஏனைய பாடசாலைகளுடன் போட்டி போடும் அளவிற்கு தன்னை கற்றலிலும் ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் நிலைநிறுத்திக் கொண்டது. குறிப்பாக தீவக வலய மட்டத்தில் நடைபெறுகின்ற போட்டி நிகழ்வுகளில் வெற்றிபெறுவதோடு, நிகழ்வுகளில் மாணவர்கள் தமது உடற்தகமைகளை வெளிக்காட்டுவதும் மிகவும் சிறப்பான விடயங்களாகும். மேலும் இப்பாடசாலை எதிர்காலத்தில் வளர்ச்சிப்பாதையில் தொடர ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் என்ற வகையில் மனதார வாழ்த்துகின்றேன்.

திரு.கு.செல்வகுமார்
சே.ஆ.ஆலோசகர்
(ISA)

# கல்வித்தாயை வாழ்த்துகின்றோம்

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவானிலும் நனி சிறந்தனவே.

இராஜராஜேஸ்வரி வித்தியாலயம் தனது 80 வருட நிறைவு நாளை கொண்டாடுவதை அறிந்து மிகவும் சந்தோஷம் அடைகிறோம். இராஜராஜேஸ்வரி வித்தியாலயம் எங்கள் வாழ்வுக்கு வளம் ஊட்டிய உன்னதமான ஆரம்பப் பாடசாலை. எங்கள் குடும்பத்தில் அனைவரும் அந்தக் கலையகத்தின் வழிநடத்தலால் வளர்ந்த சிறுஅரும்புகள்.

புங்குடுதீவினிலே பல ஆரம்பப் பாடசாலைகள் இருந்தாலும் இராஜேஸ்வரிக்கு ஒரு தனி இடம் உண்டு. அங்கு படித்துவிட்டு மகாவித்தியாலயம் சென்றால் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டு, நாடகம், நடனம் என பல துறைகளிலும் இராஜேஸ்வரியின் பிள்ளைகள் முன்னிலை வகித்துப் பெருமை சேர்த்தார்கள். எல்லோரதும் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் நல்ல ஆசான்களும் தன்னலமில்லாத பெற்றேர்களும் வித்திட்டனர்.

எங்களது பெற்றேர்கள் - தங்கம்மா, கந்தையா- வாழ்க்கையிலே மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலும் நற்கல்வியே தம் சிறார்களுக்கு துணைகொடுக்கும் என்பதற்குச் சான்றாக எங்கள் எல்லோரையுமே படிக்க வைத்தார்கள். நல்ல பெற்றோர்கள் தங்கள் மக்களுக்காக எவ்வளவு தியாகம் செய்கிறார்கள் என்பதற்கு எங்கள் பெற்றோர்கள் நல்ல உதாரணம்.

நாங்களும் “ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக்கேட்டதாய்” என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக இராஜேஸ்வரி அன்னையது கருணையாலும் எங்களது தாய் தந்தையரது தியாகத்தாலும் வளமடைந்தோம். பெருமை சேர்த்தோம்.

எங்களுக்கு உயிர்கொடுத்து நலம் காத்து, படிப்பூட்டி நல்வழிகாட்டிய எங்களது பெற்றேரின் ஞாபகார்த்தமாக “தங்கம் கந்தையா ஞாபகார்த்த நிதி மூலம் ரூபாய் 600,000 முதலிட்டு எங்கள் நல்வாழ்வுக்கு வித்திட்ட இராஜராஜேஸ்வரி வித்தியாலயத்துக்கு நன்றி பகிர்கிறோம் எண்பதாவது வருட நிறைவுக்கு வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு
சிரம் தாழ்த்தி வாழ்த்தி நிற்கும்
தங்கம்மா கந்தையாவின் புதல்வர்கள் பாலச்சந்திரன் - முன்னைநாள் உதவி விரிவுரையாளர் கணக்காளர் - கனடா
அருந்ததிதேவி – கன்டா
கல்விக்கரசி – முன்னைநாள் உபதபாலதிபர், கனடா
விக்னேஸ்வரன் - வைத்தியகலாநிதி, USA
சிவச்சந்திரன் - கணக்காளர் - கனடா
பிறேமச்சந்திரன் - கணக்காளர் - கனடா

**தாய்மொழியை நாம் நேசிக்க வேண்டும்
ஆனால் பிறமொழிகளையும் அறிந்து
கொள்ள வேண்டும**

# சிறந்த மனிதர்களை உருவாக்குவோம்



குழந்தையானது தாயின் கருப்பையில் இருக்கும் போதே தாயின் மனோநிலை அச் சிசுவின் வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பது உளவியல் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்ட உண்மையாகும். "கருவுற்ற பெண்கள் அழக்கூடாது" என்ற நம் தமிழ் மரபுக்கொள்கை எடுத்துக்கூறுவதும் இதேகருத்தைத் தான் "தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை" என்ற பழமொழியும் உளவியல் தத்துவத்தினையே எடுத்துக் கூறுகின்றது.

ஒரு குழந்தையினுடைய மூளையானது தன் வளர்ச்சியில் அரைப்பங்கிற்கும் அதிக வளர்ச்சியை ஆரம்ப 5 வருடங்களில் பெற்றுவிடுகின்றது. இக்காலங்களில் ஏற்படும் பலமான உணர்ச்சிகள், சிந்தனைகள் மூளையின் "அயர்வுப்புலத்தில்" மிக ஆழமாகப் பதியப்படுகின்றது. அவை சுலபமாக அழிவதில்லை "நினைவுப் புலத்திற்கும் தோன்றுவதில்லை அவை ஒதுங்கியிருந்து காலம் வரும்போது கட்டுக்கடங்காது தானாகவே நன்மையாகவோ அல்லது தீமையாகவோ வெளிவருகின்றன. எனவே குழந்தையின் வளர்ச்சிப்பருவத்தின் ஒவ்வொரு கட்டங்களிலும் பெற்றோரும், பெரியோரும் மிகவும் உன்னிப்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

பெற்றோர், பெரியோர், ஆசிரியர் சுற்றத்தவர் ஆகியோரின் நடத்தை, பேச்சு, விருப்பு, வெறுப்பு பாவனை அனைத்துமே குழந்தைகளுக்கு உருக்கொடுக்கின்ற பிரதான அம்சங்களாகும். பிள்ளைகள் தமது மாதிரிகளாக அவற்றை உள்வாங்கிக் கொள்கின்றனர். குழந்தைகள் பெற்றோரின் உள்ளார்ந்த அன்பினை உணர்ந்து கொள்ளமாட்டார்கள். ஆனால் வெளிப்படையாகக் காட்டும் ஆதரவு, அரவணைப்பு, இன்சொல், அன்புச் செயல்கள் (முத்தமிடுதல்,

தழுவுதல், பரிசளித்தல்) என்பவற்றை இலகுவில் புரிந்துகொள்கின்றனர். ஆனாலும் சில பிள்ளைகள் முத்தமிடுவதை விரும்பமாட்டார்கள். இவ்வாறான குழந்தைகளுக்கு 'முத்தம்' ஒரு வெறுப்பாக மாறி விடுகின்றது. எனவே இவ்விடயங்களில் மிக அவதானமாகச் செயற்படும் விவேகம் பெற்றோருக்கு தேவைப்படுகின்றது.

குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களைத் தெரிவு செய்வதிலும் அக்கறை செலுத்துதல் அவசியமாகும். அவர்களின் மனக்கிளர்ச்சியைத் தூண்டிவிடாததும் செயலாற்றலை வளர்ப்பதுமான பொருட்களாக அவைகள் இருப்பது விரும்பத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக பல்வேறு அளவுகளிலும் பல்வேறு நிறங்களிலுமான பந்துகள், மணிகள் உருக்கள், பொருட்கள் என்பவற்றையும், உண்மைப் பொருட்களையும் பயன்படுத்தலாம். அவைகள் பிள்ளைகள் கையாளக்கூடியனவாகவும் பாதுகாப்பானதாகவும் இருப்பது அவசியம்.

குழந்தைகளுக்கு உணவூட்டும் வேளைகளிலும், அவர்கள் குறும்புகள் செய்யும் போதும் அவர்களைப் பயமுறுத்துதல் (பூச்சாண்டி காட்டுதல், இருளைக் காட்டுதல், "உம்மாண்டி வருகின்றது பிடித்துவிடும்" என்று பயம் காட்டுதல்) அவர்களின் உள வளர்ச்சியையும், ஆளுமை வளர்ச்சியையும் மழுங்கடிக்கும் செயல்களாகும். கதிரையில் அல்லது சுவரில் மோதி அழும் குழந்தையைச் சமாதானப்படுத்த நாம் குழந்தை பார்க்கும் வண்ணம் கதிரைக்கு அல்லது சுவருக்கு அடிக்கும் செயலானது எம்மைத் துன்புறுத்துவோருக்கு நாமும் திருப்பி தீங்கு செய்யத் தூண்டுவதாகவும், வன்முறையை வளர்ப்பதாகவும் அமைகின்றது. எனவே அவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மேலும் தவறுதலாக கீழே விழுந்த குழந்தையைக் கண்டு பதறும் போதும், உரத்துக் கதைக்கும் போதும், அதட்டிக்கேட்கும் போதும் பிள்ளை உடனே அழத்தொடங்குவதைக் காணலாம். மாறாக

கண்டும் காணாதது போல் அவதானிக்கும் போது (தீங்கு இல்லாத போது) பிள்ளை தானே எழுந்து செயற்படத் தொடங்குவதை, தனது செயலைத் தொடர்வதை அவதானிக்க முடியும். ஆனாலும் பிள்ளையின் வலியைப்பொறுத்து பிள்ளையுடன் தொடர்பு கொள்ளுவதும் அவசியமாகின்றது. எடுத்துக் காட்டாக பிள்ளையை ஆதரவாகத் தூக்கி விடுதல், எழுந்திருக்கவும், அசையவும், செயற்படவும் வைத்தல் (கை, கால்கள், உடைகளில் இருக்கும் மண், தூசி, அழுக்கு போன்றவற்றை பொருத்தமானவை) தட்டிவிடுதல், உரத்துப்பேசியும், பயத்தினை ஏற்படுத்தியும் இன்னும் அதிக வலியைக் கொடுக்காமல் அன்புடன் பேசுதல் சிறந்ததாகும்.

தாயிற்கு அல்லது குடும்பத்திற்கு அடுத்தபடியாக குழந்தை தன் முழுநம்பிக்கையையும் வைப்பது தன் ஆசிரியரிலேயே ஆகும். 4 அல்லது 5 வருடமாக தாயின் - குடும்பத்தின் அரவணைப்பில் இருந்த குழந்தை அதனைவிட்டுப் புதுச்சூழலில், பாடசாலையில் நுழைகையில் அதன் ஒரே நம்பிக்கை ஆசிரியரே. ஓரளவிற்கேனும் தன் தாயிடம் கிடைத்த அன்பையும் பாசத்தையும் எதிர்பார்க்கும் குழந்தை, தன் ஆசிரியரிடமிருந்து அது கிடைக்காவிட்டால் பாடசாலையையே வெறுக்க ஆரம்பிக்கிறது.

ஆசிரியர் குழந்தையின் உடல், உள வளர்ச்சிக்குத் தேவையான பிரதான அம்சங்களாகிய போசாக்கு ஆரோக்கியம், பாதுகாப்பு, அன்பு, ஆதரவு, பாராட்டு புதிய அனுபவம் பெறல் போன்றவற்றின் மீது அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சிக்கட்டங்களும் மிகவும் நுணுக்கமாகவும், பக்குவமாகவும் அணுகப்பட வேண்டியதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறாக பெற்றோரும் ஆசிரியர்களும் சுற்றத்தாரும் சமய-சமூகத் தலைவர்களும் சமூக நிறுவனங்களும் முழுச் சமூகமுமே பிள்ளைகளின் எதிர்காலத் தலைவர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும். இன்றைய

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நன்கு பயிற்றப்பட்டு கற்பித்தல் முறைகளை அறிந்தவர்களாக, குழந்தை உளவியல், கல்வி உளவியல் அறிவுள்ளவர்களாக, அனுபவசாலிகளாக இருக்கின்றனர். அவ்வாறு இருப்பதும் முக்கியமானதாகவே உள்ளது. குழந்தைகள் உங்கள் கையில் இருக்கும் உருகிய மெழுகு போன்றவர்கள். நீங்கள் விரும்பிய உருவத்தைச் செய்து கொள்ளுங்கள்.

பிள்ளைகளின் (மாணவர்களின்) கற்றல் செயற்பாடுகளுக்கு பலவிதமான தடைகளும், பல்வேறு இடர்பாடுகளும் ஏற்படுகின்றன. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், களவு – சமூகச்சீரழிவுச் செயல்களில் ஈடுபடுத்துதல், சிறுவர் துஸ்பிரயோகம். பாலியல் துஸ்பிரயோகம் போன்றன அவற்றில் சிலவாகும். இவற்றுக்கு பெரும்பாலும் பெற்றோர், பெரியோர், ஆசிரியர், சமூகத்தவரின் அக்கறையின்மையும், கவனிப்பற்ற தன்மைகளும் காரணமாக அமைகின்றன. வேண்டாத செயல்களும் வீணான அச்சுறுத்தல்களும் தவறான வழிகாட்டிகளும் பிள்ளைகளின் மனதை ஒருமுகப்படுத்தல், கற்றலில் ஈடுபடுதல், ஞாபகப்படுத்தல் என்பவற்றை முடியாமல் ஆக்குகின்றன. எனவே அவை தவிர்க்கப்பட வேண்டும்.

ஆரம்பக்கல்வியே கல்வியின் அடி அத்திவாரமாக, ஆணிவேராக உள்ளது. ஆரம்ப அறிவு இல்லாது இடைநிலைக்கல்வி, உயர்கல்வி பெறவோ புலமை மிக்கவராகவோ முடியாது. அதுவே பிள்ளையின் எதிர்கால வாழ்வின் வளர்ச்சியை நோக்கி வழிநடத்தக் கூடியதாகக் காணப்படுகின்றது.

கல்வியறிவுடன் ஒழுக்கமும், நற்பண்புகளும், மனித – சமூக விழுமியங்களும் பிள்ளைகளிடம் (மாணவர்களிடம்) வளர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். பிள்ளைகள் சமூகத்திற்கு பொருத்தப்பாடு உடையவர்களாக வளர - வளர்க்கப்பட வேண்டும். தன்னையும்

சமூகத்தையும் நேசிப்பவராகவும் தனக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள வகையில் செயற்படக் கூடியவராகவும் அவர்கள் திகழ வேண்டும்.

எனவே பெற்றோர், பெரியோர் தமது பொறுப்புக்களை உணர்ந்து சரிவர நிறைவேற்ற வேண்டும். பிள்ளைகளுக்கு தேவையானவற்றைக் கொடுத்து உதவிசெய்வதுடன் சிறந்த முன்மாதிரிகையாக தாமும் செயற்பட வேண்டும். பெற்றோர், பிள்ளைகளின் முதல் ஆசிரியர்களாகவும், ஆசிரியர்கள் பிள்ளைகளின் இரண்டாவது பெற்றோர்களாகவும் இருந்து அவர்களை வழிப்படுத்தவேண்டும். பிள்ளைகளும் தமது கல்வியை விருப்புடனும் நிறைவுடனும் கற்றுக்கொள்வதில் ஆர்வமாக இருக்கவேண்டும். தமது கடமைகளை கருத்துடன் செய்ய வேண்டும் இடர்பாடுகளைத்தாண்டி முன்னோக்கிச் செல்ல முயலவேண்டும் அப்போது வெற்றி கிடைப்பது நிச்சயம். நாட்டுக்கு உகந்த நற்பிரஜைகள் உருவாகுவார்கள்.

திரு. சி. வின்சன்ராஜ்
ஆசிரியர்

**எமது சமயத்திற்கு வணக்கம் செலுத்துவோம்**

**அதேபோல் பிற சமயங்களுக்கும் உரிய மதிப்பளிப்போம்**

# வாழ்த்து செய்தி

இலங்கைத் திருநாட்டின் வடபுலத்திலே சப்ததீவுகளில் ஒன்றான புங்குடுதீவிலே நடுமையமாக விளங்கும் கண்ணகை அம்பாளின் அருளோடு யா/புங்குடுதீவு இராஜ இராஜேஸ்வரி வித்தியாலயம் மழலை செல்வங்களின் அயராத உழைப்பினால் "அமுதமலர்" என்ற ஒரு மலரினை மலரவிடுவதில் ஊட்ப்பாடசாலையாக இருக்கின்ற யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம் பெருமை கொள்கின்றது. அதன் அதிபராகிய நான் வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமை அடைகின்றேன். சைவமும் தமிழும் தலைத்தோங்க சைவத்திருமுறை தந்த வள்ளல்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இப்பாடசாலை, 1937 இல் ஆரம்பிக்கப்பட்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 1991 இல் மூடப்பட்டது. மீண்டும் 2013 இல் இருந்து அதிபர் திரு. க. சிறிதரன் அவர்களின் நெறிப்படுத்தலில் பல இன்னல்களின் மத்தியில் வெற்றி நடைபோடுகின்றது. மாணவர் தொகை மிக குறைந்த எண்ணிக்கையாக இருந்த போதும் ஆரம்ப பாடசாலைக்குரிய செல்நெறியில் மாணவர்களின் தேர்ச்சி மையத்தை நோக்கி இச் சஞ்சிகை மலர்வது பெருமைக்குரியது, பாராட்டுதற்குரியது வாழ்த்துகின்றேன்.

அ. கனகரத்தினம், அதிபர்
யா/ புங்குடுதீவு ம.வி
புங்குடுதீவு



## மெய்ப்பொருள் காண்பது அறிவு

எமது புங்குடுதீவுப் பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் அறிவு மேம்பாட்டுக்கு உழைத்து வரும் புங்குடுதீவு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி தமிழ்க்கலவன் வித்தியாலயம். இன்று தனது எண்பதாவது ஆண்டினைப் பூர்த்தி செய்து நிற்கின்றது. இந்த எண்பது ஆண்டுகளில் பல மாணவச் செல்வங்களை எமது மண்ணில் உருவாக்கிப் பெருமை நேர்த்து நிற்கின்றது. ஒரு ஊரில் கோயில் கட்டி வைப்பதிலும் ஒரு பாடசாலையினை உருவாக்கி அங்கு வாழும் பிள்ளைகளுக்கு அறிவினை வழங்குவது உயரிய சேவையாகும். ஓர் ஊரில் ஒருவன் அறிவுடையவனாக உருவாகினால் அவனைப் பார்த்து மற்றவர்களும் அந்த வழியில் சென்று தமது வாழ்வினை நல்ல முறையில் உருவாக்கிக் கொள்வதற்கான தூண்டுதலைப் பெறுவார்கள். ஒரு விளக்கினை ஏற்றினால் அதில் இருந்து பல தீபங்களை நாம் ஏற்றலாம். அந்த ஒரு விளக்காக இப்பாடசாலை விளங்குகின்றது. அதன் ஒளியில் ஏற்றப்பட்ட தீபங்கள் இன்று பலவிடங்களிலும் பரவி வாழ்ந்து தமது கல்லூரித்தாயின் பெயரினைப் புகழினை விளக்கி நிற்கின்றனர். இன்று அந்தக் கல்லூரித் தாய்க்கு எண்பதாவது அகவை நிறைவடைகின்றது. அதனை முன்னிட்டு அவள் புதல்வர்களும் புதல்விகளும் தமது தாய்க்கு விழா எடுத்துச் சிறப்பிக்கின்ற இந்தத் தருணத்தில் நானும் ஒருவனாக அதில் இணைந்து நிற்பதையிட்டு மனமகிழ்வு கொள்வதோடு அவ்விழாச் சிறப்புற அமைய என் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

"சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

வசந்தகுமார் அபராஜ்
பொது சுகாதாரப் பரிசோதகர்
புங்குடுதீவு

## வாழ்த்து செய்தி

புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி வித்தியாலயத்தின் 80 வது அகவையை முன்னிட்டு வெளிவரும் "அமுத மலர்" எனும் இந்நூலிற்கு வாழ்த்துச் சொல்லும் பெரும்பேற்றைக் கண்டு பேருவகை அடைகின்றேன். உண்மையில் எமது ஊரைப்பொறுத்த வகையில் அனைத்துப் பாடசாலைகளுமே ஏதோ ஒரு வகையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர்ச்சூழல்களால் பாதிப்படைந்து இருந்த தடங்களும் இல்லாமல் போனது கண்டுள்ளோம். ஆனாலும் இவ் வித்தியாலயமானது ஆற்றொணாத் துயர் நிறைந்த தடைகள் தாண்டியும் மீள ஆரம்பிக்கப்பட்டு தன்னகத்தே வரும் மாணாக்கரைத் தாங்கி நற்பிரசைகளாய் இவ் உலகத்திற்கு வெளிக்கொண்டு வருவதில் நிறைவை காண்கின்றது. எனவே, காலத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான விழா எடுத்து மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தினோடு "அமுத மலர்" என்னும் இந்நூலை வெளியிடுவதை போற்றத்தக்கதென்றே கருதுகின்றேன். எனவே, இனி வருங்காலங்களில் கல்வியிலே பல சாதனைகளைக் கண்டு மிளிரவும் இந்நூல் சிறப்புற வெளியிட முழுமனதோடு பாடுபட்ட பாடசாலை முதல்வர், மற்றும் ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் என அத்துணை உள்ளங்களுக்கும் புங்குடுதீவு உலக மையத்தின் சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறி மகிழ்கின்றேன்.

நன்றி

மகிழ்வுடன்.
பி. சதீஸ்
(தலைவர் புங்குடுதீவு உலகமையம்)



# வாசிப்பின் முக்கியத்துவமும் வாசிப்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளும்

நாம் அன்றாடம் பல்வேறு வாசிப்பு சாதனங்களைப் பயன்படுத்துகின்றோம். பல்வேறு தேவைகளுக்காக வாசிக்கின்றோம். கற்றலுக்காக மட்டுமன்றி தகவல் திரட்டல், செய்திகளை அறிதல், தொடர்பு கொள்ளல், இரசித்தல், பொழுதுபோக்கு என்பன அத்தேவைகளுக்குள் சிலவாகும். நூல்கள், சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள், வாராந்தப் பத்திரிகைகள் மாதாந்தப் பத்திரிகைகள், விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், துணுக்குகள், பழமொழிகள், விடுகதைகள், அறிவித்தல்கள் என்றவாறு வாசிப்புக்கள் பல வகையின. ஒவ்வொரு வாசிப்புச் சாதனங்களிலும் பல வடிவங்கள் உள்ளன. உதாரணமாக நூல்களை எடுத்தால் எத்தனை வகையான நூல்கள் மொழி, இலக்கியம், விஞ்ஞான வரலாறு, சமயம், தத்துவம் என்றவாறு ஒவ்வொரு துறைக்கும் பற்பல நூல்கள் உள்ளன. அத்துடன் சிறுகதை, நாவல், கவிதை, காவியம் என்று எத்தனையோ இலக்கிய வடிவங்கள் உள்ளன.

வாசிப்பானது வாழ்க்கையில் முக்கியம் பெறுவது போலவே பாடசாலைக் கல்வியிலும் முக்கிய இடத்தைப் பெறுகிறது. மாணவரது கற்கும் ஆர்வத்தினை மேம்படுத்துவதற்கு வாசிப்பு ஓர் இன்றியமையாத செயற்பாடாகும். எனவே வாசிக்கும் ஆற்றலை மாணவர்களிடம் விருத்தி செய்து அவர்களை கற்றலுக்கு நெறிப்படுத்துதல் வேண்டும்.

வாசிப்பு பல நுட்பங்களையும் பொறிமுறைகளையும் கொண்ட ஒரு செயற்பாடாகும். பல வகைகளைக் கொண்டது. பல்வேறு தேவைக்களுக்கேற்ப பல்வேறு படிமுறைத் தன்மைகளையும் கொண்டமைந்தது. வாசிப்பு ஓர் உடல், உள இயக்கச் செயற்பாடாகும். வரிவடிவத்தில் உள்ள எழுத்துக்களைப் பார்த்தல்,

அவற்றை இனங்காணுதல், எழுத்தொலிகளைக் கொண்டு சொற்களை உச்சரித்தல், பொருள் படக் கூறுதல் என்றவாறு உடலுறுப்புக்களும் உள்ளமும் சேர்ந்து இயங்குவதைக் காணலாம். இங்கே கண்களின் தொழிற்பாடு மிக முக்கியமாகும். வரிவடிவங்களின் மீது கண்களை இடமிருந்து வலமாக வேகமாக நகர்த்திச் செல்ல வேண்டும். இவ்வாறு நகர்த்திச் செல்லும் போது வரிவடிவங்களை இனங்காண்பதோடு எழுத்தொலிகளை கூட்டியும் குறைத்தும் உச்சரிக்க வேண்டும். இவ் இயக்கங்கள் ஒரே நேரத்தில் நிகழ வேண்டும். வாசித்தலில் இரு நிலைகள் உண்டு. அவை.

- பிறருக்கு வாசித்தல் - உரத்து வாசித்தல் - வெளியிடல்
- தனக்காக வாசித்தல் - மௌனவாசிப்பு – கிரகிப்பு

வாசிப்பின் போது சில நுண்முறைகளைக் கடைப்பிடித்து வாசித்தல் வேண்டும். அப்பொழுது தான் பொருளைப் புலப்படுத்தவோ அல்லது கிரகிக்கவோ முடியும்.

1. தெளிவாக உரத்து வாசித்தல்.
2. பொருள் புலப்பட வாசித்தல்.
3. குறியீடுகளை அவதானித்து வாசித்தல்
4. மெய்ப்பாடுகள் தொனி வேறுபட வாசித்தல்
5. பாத்திரமேற்று வாசித்தல்
6. பொருள் கிரகிக்க வாசித்தல்
7. நுணுக்கங்களை அனுசரித்து வாசித்தல்.
8. தெரிவு செய்து வாசித்தல்

தெளிவாக உச்சரித்து வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு உரத்த வாசிப்பு பெரும்பாலும் ஆரம்ப மட்டங்களில் மேற்கொள்ளப்படும். இடைநிலை உயர்நிலை வகுப்புக்களில் கருத்தூன்றி வாசித்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்ப வகுப்பில் மாணவர் தமிழ்மொழியை ஏனைய பாடங்களுடன் ஒன்றிணைத்தும் தனிப்பாடமாகவும் கற்கின்றனர். சுற்றாடலில் அவர்கள் பெறுகின்ற அனுபவங்கள், ஊடகங்கள் தொடர்புகள் என்பன மொழியைக் கற்கவும், பிரயோகிக்கவும் உதவுகின்றன.

குழந்தை பிறந்ததிலிருந்தே மொழியைக் கற்றுக் கொள்கிறது. அதன் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு மொழி உதவுகின்றது. அடிப்படை மொழித்திறன்களாக கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பனவாகும். இத்திறன்களை சிறிய வயதிலிருந்தே விருத்தி செய்ய வேண்டும்.

வாசிப்புத் திறனில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக பிள்ளையின் உடல், உள மனவெழுச்சி, சமூக அபிவிருத்திகளுடன், அவனுடைய மொழி வளர்ச்சியும் அமையும். பிள்ளையின் வயது அதிகரிக்கும் போது அவனுடைய உடல் உறுப்புக்களும் வளர்ச்சியடையும். குழந்தைப் பருவத்தில் உடல் உறுப்புக்களால் செய்யக் கூடிய செயல்கள் மிக்க குறைவாகவே இருக்கும். உதாரணமாக ஒரு குழந்தையின் காது பிரதான உறுப்பாக அமைந்திருந்தாலும் ஆரம்பத்தில் தாயின் வாயில் இருந்து உண்டாகும் ஒலிகள் போன்ற சில ஒலிகளை மாத்திரமே அதனால் இனங்காண முடியும். காலப்போக்கில் சூழலிலிருந்து பல ஒலிகள் காதில் விழுவதால் அவ்வொலிகளை பிரித்தறிந்து கொள்ளும் வகையில் இந்தச் செயற்பாடு படிப்படியாக நடைபெறும். உறுப்புக்களின் வளர்ச்சிப் படிமுறைகளை ஏற்படுத்துவதற்கும் கண், கை போன்ற அவயங்களின் வளர்ச்சி உதவுவதுடன் பிள்ளையின் மொழி வளர்ச்சிக்கு துணையாக இருக்கும். மொழி வளர்ச்சிக்கு உடல்

உறுப்புக்கள் மாத்திரம் போதியதன்று. படிப்படியாக உள மனவெழுச்சியும், அபிவிருத்தியும் தேவையாகும். பிள்ளைகளின் வாசிப்புத்திறன் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் சுய காரணிகளை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. உடல் சம்பந்தமானவை
2. உளம் சம்பந்தமானவை
3. மனவெழுச்சி சம்பந்தமானவை

அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பவற்றின் திறன்களைப் பெற முதன்மையானவை கண், காது, வாய் என்பவற்றில் குறைபாடுகள் ஏற்பட்டால் அடிப்படை மொழித்திறன் விருத்தியில் அது தாக்கத்தை ஏற்படுத்தும்.

மனிதர்கள் தமது மனவெழுச்சி நுண்மதி ஆகியவற்றின் வளர்ச்சியில் வெவ்வேறு நிலையில் காணப்படுவர். மனவெழுச்சி தோன்றுவதற்கு சுற்றாடலில் காணப்படும் ஊக்கிகளே காரணமாகும். மனவெழுச்சியின் காரணத்தினாலே மனிதர் முகத்தில் துக்கம், கோபம், மகிழ்ச்சி உணர்ச்சிகளின் மாற்றம் காரணம் எனக் கூறப்படுகின்றது.

வாசிப்புத்திறனில் தாக்கத்தை ஏற்படுத்தும் சுற்றாடல் காரணிகளை எடுத்தால் இது பல வகையாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

1. குடும்பம்
2. சம வயதுக்குழுக்கள்
3. பாடசாலை
4. தொடர்புறுத்தும் ஊடகங்கள்
5. வேறு காரணிகள்

என்பன முக்கியம் பெறுகின்றன.

பிள்ளையின் முதலாவதும் முக்கியமானதுமான சுற்றாடல் குடும்பம் ஆகும். ஆரம்பத்திலேயே குழந்தையின் தாக்கம் உண்டாக்குபவர் தாய், தந்தை ஆவார். படிமுறையாக மொழியின் கருத்தை விளக்கும் பருவத்தை அடையும் போது சகோதர சகோதரிகள் உட்பட குடும்பத்தில் ஏனைய அங்கத்தவர்களின் உறவும் பிள்ளைக்கும் கிடைக்கும். இந்த உறவாக குடும்பத்தில் சில மொழி உபயோகங்களின் நடைமுறைகளை குழந்தை பழகிக் கொள்கிறது. பிள்ளை சொல்வளம், உச்சரிக்கும் திறன்கள் ஆகியவற்றை வீட்டில் உள்ள சுற்றாடலில் தன்மைக்கேற்ப ஊகித்து அறிந்து கொள்கிறது. பாடசாலைக்குப் பிள்ளை வருவதற்கு முன்பே குடும்பச் சுற்றாடலின் இருந்து பிள்ளை கல்வி கற்கிறது. குடும்ப உறுப்பினர்களிடமிருந்து மொழிப்பயிற்சி பெறும் குழந்தை தனது ஐந்தாவது வருட முடிவில் பாடசாலை செல்கிறது.

பிள்ளை மூன்று வயதிலிருந்து சமூகச் சூழலோடு ஈடுபாடு கொள்ளத் தொடங்கிறது. கேட்டல், பேசுதல், எழுதுதல் ஆகிய மூன்று மொழித்திறன்களில் துரித வளர்ச்சி உண்டாவது சமவயதுக் குழுக்கள் ஒன்றுசேர்வதில் ஆகும். குழந்தைகள் விளையாடும்போது குழந்தையை தாலாட்டுதல், வைத்தியர், சாரதி போன்று பல பாவனை செய்தல், மண்சோறு விளையாடுதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக மொழி விருத்திக்கான அடித்தளம் இடப்படுகின்றது.

திரு. ச. தர்மலோஜினி

ஆசிரியை

**சைவ இளைஞர் சங்கம்**

**கண்ணகைபுரம்,புங்குடுதீவு– 10**

**யாழ் /புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ்க் கலவன் வித்தியாலயம்**

## அமுதவிழா வாழ்த்துப்பா

நாற்புறமும் ஆற்பரிக்கும் நீலக்கடல் சூழ்ந்து
காற்றிடையில் ஆடிவரும் தென்னங்கீற்றோடு
பனைகளோடு பூத்துக் குலுங்கும் பூவரசும்
அதைத் தேடிவரும் குருவிகளுமாய் - காலை
கதிர்வன் உதிப்பதும் அந்திசாய்வதுமான
புங்குடுதீவு தெற்கு கடற்கரையில்
அருளாட்சி புரிகின்ற எங்கள் குல
தெய்வமாம் கண்ணகி அம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் பதிகொண்ட
பத்தாம் வட்டாரத்தில் பிறந்து வளர்ந்த–நாம்
ஆரம்பக் கல்வி கற்று அகிலமெலாம்
வேருன்றி விழுதெறிந்து வாழ்ந்திடவே
எம் கல்விக்கன் திறந்த எம் தாயே
இராஜராஜேஸ்வரி வித்தியாலயமே.

உன் மடியில் நாம் தவழ்ந்து விளையாடிய நாட்கள்
உன் முற்றத்தில் நண்பர்களுடன் கட்டிப் புரண்ட ஞாபகங்கள்
உன் வீட்டுத் தோட்டத்து ஒற்றை வேப்பமாத்தடியில்
ஓடி விளையாடிய இனிமையான பொழுதுகளும்
குட்டிச் சுவர் ஏறி குதித்து விளையாடி ஆசிரியர்களிடம்
மாட்டிகொண்டு அடிவாங்கிய ஞாபகங்களுமாய்
என்றென்றும் உன் வாசல் வரக் காத்திருக்கும்

நீவளர்த்தெடுத்தமாணவர் நாம் - எமைப்
போன்று இன்னும் பல்லாயிரம் மாணவர்களை
உருவாக்கிந் தந்திடவே நீ வாழவேண்டும்
இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள்.

எமை வளர்த்தெடுத்த இராஜராஜேஸ்வரியே
இன்றோடு நீ பிறந்து எண்பது ஆண்டுகள்
நிறைவடைந்து அமுதவிழாக்காணும்
பொன்னான் தருணத்தில் கண்ணகைபுரத்தைச்
சேர்ந்த சைவ இளைஞர் சங்கத்தினர் நாம்
வாழ்க நின்புகழ் வளர்க நின்பணி
என்று நீடூழி காலம் வாழ்க பல்லாண்டு
என எம் சிரம் தாழ்த்தி உனை
வாழ்த்தி வணங்குகின்றோம்.

**சைவ இளைஞர் சங்கம்**
**கண்ணகைபுரம்**
**புங்குடுதீவு– 10**

**எமக்குக் கடவுள் தந்த செல்வமும் பதவியும் எமக்கானது மட்டும் என நினைப்பது அறிவீனம்**

# மொழித்திறன் பாடல்

சந்தைக்குப் போனேன் சந்தைக்குப் போனேன்
சாம்பல் பூசணி வாங்கிடவே
சண்டைக்குப் போனேன் சண்டைக்குப் போனேன்
தாய்ந்திரு நாட்டை காத்திடவே

வெல்லத்தைப் பார்த்தேன் வெல்லத்தைப் பார்த்தேன்
வேலுச் சாமி கடையினிலே
வெள்ளத்தைப் பார்த்தேன் வெள்ளத்தைப் பார்த்தேன்
விடாது பெய்த மழையினிலே

தவளையைப் பிடித்தேன் தவளையப் பிடித்தேன்
கரையில் தத்திச் செல்கையிலே
தவலையைப் பிடித்தேன் தவலையைப் பிடித்தேன்
தலையில் தூக்கி வருகையிலே

கொல்லையில் கிடைத்தது கொல்லையில் கிடைத்தது
குலையுடன் எனக்கு மாம்பழமே
கொள்ளையில் கிடைத்தது கொள்ளையில் கிடைத்தது
கொடியவனுக்குத் தண்டணையே.

கு.ஜன்யா
தரம் - 04



# கண்ணகி வழக்குரைத்தல்

**காட்சி – 01**

பாத்திரங்கள் : பாண்டிமாதேவி, தோழியர்

இடம்: பாண்டிமாதேவியின் அந்தப்புரம்

காலம் : முற்பகல்

(பாண்டிமா தேவி ஒரு பீடத்தில் அமர்ந்திருக்கின்றாள். தோழியர் அருகில் அமர்ந்துள்ளனர்)

ஒரு தோழி :- தோழியரே மன்னிக்க வேண்டும் உங்கள் அழகிய முகம் என்றும் போல இல்லை இன்று சிறிது வாட்ட முற்றிருக்கிறது. பொலிவிழுந்து காணப்படுகிறது. காரணம் யாதோ? உடல் நலம் இன்மையால் அங்ஙனம் உள்ளதோ? தெரிவித்தால் உடனே ஆவன செய்யலாமே!

பாண்டிமா தேவி :- பாங்கி! நீ கூறுவது உண்மையே ஆனால் உடலில் நோய் ஒன்றுமில்லை மனந்தான் நலிவடைந்துள்ளது.

தோழி :- கோப்பெருந்தேயீர்! வளம் கொழிக்கும் வைகை நாட்டுக்கு இறைவியரே மீனாட்சி சுந்தர் அருளால் எல்லாச் செல்வந்களையும் பெற்று விளங்கும் உங்கள் மனம் நலிவடையைச் காரணம் யாதோ? விருப்பமிருப்பின் அடியாள் மீது அன்பு கூர்ந்து அதனை வெளியிடுங்கள் இனறே - இல்லை இப்போதே அதனை அகற்றுதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

தேவி :- உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டிய இரகசியம் இன்று மில்லை இன்று விடியற் காலையில் சில, தீக் கனவகள் கன்டேன் கடைசிச் சாமத்திற்காணும் கனவு, உடனே பலிக்கும் என்று கனாநூல் வல்லார் கூறக் கேட்டுள்ளேன். அதனாற்றான் என் மனம் கவல்கிறது.

தோழி :- பாண்டிமா தேவியீர்! நீங்கள் கூறுவது உண்மையே ஆயினும் ஆண்டவன் அருள்பெற்றவர்களிடத்தில் நாள், கோள், வினைப்பயன், என்பன வலுவற்றுப் போகும் என்ற ஆன்றோர். வாக்குக்கிணங்க இத்தீக்கனவு யாது செய்ய வல்லது? அக்கனவு இன்னதென விவரிக்கலாமன்றோ?

பாண்டிமாதேவி:- பாங்கி விவரிக்கலாம். அதை தினைக்குத் தோறும் மனம் வேதனையுறுகின்றது. விவரிக்கவும் வாய் நடுங்குகின்றது ஆயினும் கூறுவேன் கேள் நான் கண்ட கனவுகள் பல ஒன்றில் செங்கோலும் வெங்குடையும் நிலத்து வீழ்ந்தன. அரண்மனை வாயில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது. ஒரு கனவில் எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன. சூரியனை விழுங்கக் கூடிய இருள் உண்டாய்ச்சு. பிற்றொரு கனவில் இரவில் இந்திரவில் இட்டிருந்தது பகலில் விண்மீன்கள் விழுந்தன. ஆதலால் வருவதோர். உற்பாதம் உண்டு இவற்றை மன்னருக்கு உரைப்போம் வருக

தோழி :- அங்ஙனமே செய்வோம். ஆரடியங்கே! நம் கோப்பெருந்தேவியார் அரசர் அவைக்குச் செல்கின்றார். அதி விரைவில் அட்டமங்கலங்கள் ஏந்தி வாருங்கள்.

ஏவல்மகளில் :- இதோ! அந்து விட்டோம் அம்மணி

(பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையில் அமர்ந்திருக்கிறான் பாண்டிமாதேவி சபையை நோக்கி வருகின்றாள். அவளை ஏவல் மகளிர் அட்ட மங்கலங்களை ஏந்திக் கொண்டு சூழ்ந்து வருகின்றனர்.)

ஏவல்மகளிர் :- பாண்டியரின் பெருந்தேவி வாழ்க!

(பாண்டிமாதேவி அரசர் அருகில் வந்து வணங்கினாள்)

நெடுந்செழியன் :- தேவி! மீனாட்சி சுந்தர் அருளால் மங்கலம் உண்டாக்கட்டும் (தன் அரியணையின் ஒரு புறத்தைச் சுற்றி) இங்கு அமர்க! திடீரென்று தம் அவையின் கண்வரக் காரணம் யாதோ? ஏன் உன் முகம் வாடியிருக்கின்றது? உடல் நலமின்றோ, பிற காரணம் யாதேனு முண்டோ?

கோப்பெருத்தேவி :- நாதரே! அடியாள் இன்று விடியற் காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். அது முதல் என் உள்ளம் நடுங்குகின்றது. நம் செங்கோலும் வெண் கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன. அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது.

நெடுந்செழியன்:- ஆ! என்ன செங்கோலும் குடையும் நிலத்தில் வீழ்ந்தனவா? அமைச்சர் பெருமக்களே, கேட்டீர்களா கோப்பெருத்தேவி கூறியதை!

(அத்தருணத்தில் அவைக்கு வெளியே நின்ற வாயில் காவலனைக் கண்ணகி அணுகி)

கண்ணகி :- வாயிலோயே! வாயிலோயே! அறநெறி மறந்த அரசனின் வாயிலோயே கணவனை இழந்தாள் ஒருத்தி கையிற்

சிலம்பொன்று ஏந்தி வந்து வாசலில் காத்திருக்கின்றாள் என்று நீதி கெட்ட நெடுஞ்செழியனுக்கு அறிவிப்பாயாக!

காவலன் :- (அரசனை அணுகி) அரசர் பெருமானே! வாயிலில் வந்திருக்கிறாள். ஒருத்தி அவள் எருமைக் கடாவை தாகனமாகக் கொண்ட கொற்றவையும் அல்லள் பிடாரியும் அல்லன் பத்திரகாளியும் அல்லன் அவள் கண்கள் கோபக்கனலைக் கக்குகின்றன. கணவனை இழந்தவளாம் கையிற் சிலம்பொன்று ஏந்தியுள்ளாள்.

நெஞ்செழியன் :- அவள் வருக, அவளை விரைவில் உள் விடுக (கண்ணகி சபையில் வந்த மன்னன் முன் நிற்கின்றாள்)

நெடுஞ்செழின் :- பெண்ணே, ஏன் கண்ணீர் சொரிகின்றாய்? நீ யார்?

கண்ணகி :- நான் புகார் நகரில் வாழ்கிறேன் அவ்வூர்ப் பெருங்குடி வணிகர் மாசாத்துவம் என்பவரின் புதல்வி கோவலருக்கு மனைவி யான் அவர் ஊழி வினையால் உமது நகரில் வந்து என் காற்சிலம்பொன்றை விலைப்படுத்த விரும்பி, உம்மாற் கொலையுண்பார் என் பெயர் கண்ணகி.

நெடுஞ்செழியன் :- நன்று! கள்வனைக் கொல்லுதல் நீதி தானே?

கண்ணகி தீலக் கேட்டறியாமல் கொலைக் கட்டளையிட்டுத் கோவலரைக் கொன்றமையால் உமது நீதி முறைமை கெடுவதாயிற்று அதனைக் காட்டுவேன் என் சிலம்பின் அரிமாணிக்கம்.

நெடுஞ்செழியன் :- என் தேவியுடைய சிலம்பின் பரல் முத்தே. (உடனே இரண்டு சிலம்புகளும் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. கண்ணகி தன் காற்சிலம்பை எடுத்துத் தரையின் மீது வீசி ஏறிகிறாள். அது உடைகிறது அதனுள் இருந்தவை அரிய மாணிக்கம் என்பதை அரசன்காண்கிறான்)

ஆ! என்னே! என் மதி! என்னே என்முறை! ஆந்தோ!
பொற் கொல்லன் பொய்யுரை கேட்ட யானோ அரசன்?
யானே கள்வன் என் அருமரபு என்னால்
பழியுற்றதெ! ஏன் ஆயுள் கெடுவதாக!

(அரசன் அரியணையிற் சாய்ந்து மரண
மடைகின்றான் அதைக் கண்ணுற்ற பாண்டிமா
தேவி அவன் மீது வீழ்ந்து மரண மடைகின்றான்)

(திரைவிழுதல்)

* * *

க.கரிகரன்
தரம் - 05

**பக்தி இல்லாத கல்வியும், வீரமும் வீணாகிவிடும்**



# ஆசை

வண்ணக் கிளிபோல் பறந்திட ஆசை!
வானத்து நிலவாய் ஒளிதர ஆசை!
கன்னல் தமிழைக் கற்றிட ஆசை!
கடலில் மீனாய் நீந்திட ஆசை!
மலர்களைப் போல மணந்தர ஆசை!
மலைமேல் மலைமேல் ஏறிட ஆசை!
தளர்வோர்க் கென்றும் உதவிட ஆசை!
தாய்போல் அன்பைப் பொழிந்திட ஆசை!
கடமையை உணர்ந்து செயல்பட ஆசை!
கடின உழைப்பால் வென்றிட ஆசை!
மடமையைக் கொளுத்திட மனதிலே ஆசை!
மனிதனாய் வாழ்ந்து புகழ் பெற ஆசை!

சா. கபிஷாயினி
தரம் - 03

# விடுகதைகள்



01.தீக்குளித்தாலும் திடமாக இருப்பான்?

செங்கல்

02. வரும்போது வெண்சிவப்பு! வளரும் போது தகதகப்பு போகும் போது கடுச்சிவப்பு?

சூரியன்

03. மழைக்காலம் வந்து விட்டால் மகராசி பாட்டு பாடுவாள்

தவளை

04. கல் வீட்டு தாத்தா மெதுவாக நடப்பார்?

ஆமை

05. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை?

மண்புழு

06. புத்தாண்டு புகுந்து தங்குவது ஓராண்டு காலம்?

கலண்டர்

07. வெயிலில் மலரும் காற்றில் உலரும்?

வியர்வை

08. தலையைச் சீவினால் தாளிலே நடப்பான்?

பென்சில்

09. உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார்?

தராசு

10. ஊசி போட்ட வைத்தியர் பாடிக்கொண்டே பறப்பார்?

நுளம்பு

வெ. சுலக்சன்

தரம் - 05

## போராடி வெல்



யானைகள் வாழும்
பூமியில் தான்
எறும்புகளும்
வாழ்கின்றன.

பூனைகள் வாழும்
வீடுகளில் தான்
எலிகளும் வாழ்கின்றன.

சிறுத்தைகள் வாழும்
காடுகளில் தான்
மான்களும்
வாழ்கின்றன.

சுறாக்கள் வாழும்
கடலில் தான் சிறு
மீன்களும் வாழுகின்றன.

பாம்புகள் வாழும்
வயல்களில் தான்
தவளைகளும்
வாழுகின்றன.

வாழ்க்கை என்பது
ஏய்த்துப் பிழைப்பதல்ல
போராடி செல்வது

மோ.டிலக்சன்
தரம் - 05

சர்வமத முன்பள்ளி மாணவர்கள் ஆசிரியர்களுடன்



பாடசாலை பான்ட் குழு



# முன்பள்ளிக் கல்வியே வாழ்க்கையின் உரம்



"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். ஆதலால் மனிதப்பிறவி எடுத்திருக்கும் நாங்கள் ஒவ்வொருவரும் பாக்கியசாலிகளே. இந்த அருமையான மனிதப்பிறவியை எடுத்திருந்தாலும் கல்வியில் சிறந்து விளங்காவிட்டால் அதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை .

கல்வி கற்று அதன் படி நடந்து மனிதர்களாக வாழ்ந்தால் தான் இந்த மானிடப்பிறவி மகத்தானதாக இருக்கும். எவ்வளவு பணக்காரர்களாக இருந்தாலும் கல்வி அறிவு இல்லையென்றால் அது சிறப்பில்லாத ஒன்று தான்.

ஒருவருடைய குழந்தைப்பருவமே அனேகமாக அவருடைய வாழ்க்கைப்பருவத்தை தீர்மானிக்கின்ற பருவமாக இருக்கின்றது. ஒரு பிள்ளை ஐந்து வயதிற்குள்ளேயே பூரண மனிதனுக்குரிய இயல்புகளைப் பெற்றுக் கொண்டு குறிப்பிடத்தக்க அளவு ஆளுமையை வளர்த்துக் கொள்வதாகவும் பிள்ளை ஐந்து வயதிற்குள் அடைகின்ற தீமைகளை மீள் திருத்திக் கொள்வது மிக கடினமானது எனவும் அறிஞர்களால் குறிப்பிடப்படுகின்றது. எனவே இந்தப்பருவத்தில் பெற்றோரும், ஆசிரியர்களும், சமூகமும் முக்கிய பங்கெடுத்துக் கொள்வது அவசியமாகும்.

"கற்ககசடதக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக"

என்பது வள்ளுவர் வாக்காகும். படித்தால் மாத்திரம் போதாது படித்தபடி நடக்கவும் வேண்டும். இதற்கு உறுதுணை புரிவது

பாலர் கல்வியே. "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பது மூத்தோர் வாக்கு. அந்த வகையில் சிறுபராயத்திலே கற்கும் கல்வி தான் உள்ளத்திலே பசுமரத்தாணி போன்று பதிந்து விடும். நல்லன எது? தீயன எது? என்று பகுத்தறியும் பராயம் இருக்கும் போதே கல்வியைக் கற்றுவிடவேண்டும். இந்த பரந்த உலகிலே இப்படித் தான் வாழவேண்டும் என்று நம்முன்னோர்கள் வரையறைப்படுத்தியுள்ளனர். நீதி, நேர்மை, நல்லொழுக்கம் நற்பண்பு என்பது எல்லோராலும் கடைப்பிடிக்க வேண்டியதாக உள்ளது. அந்த இயல்பு வாழ்க்கையை நாமும் பின்பற்ற வேண்டும். அவ்வாறு அதைப்பின்பற்றி வாழ்க்கையை வாழ்ந்து வந்தாலே நாம் மனித வாழ்வில் வெற்றிகாண முடியும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது சிறுபராயத்திலே நாங்கள் எந்த மாதிரியான பழக்க வழக்கமுள்ள பண்பு நிறைந்த வாழ்க்கையை வாழப் பழகிக் கொள்கிறோமோ அந்த வாழ்க்கைப் பழக்கமும் பண்பும் தான் நமக்கு வழக்கமாக வந்து விடும். பொய், களவு என்பன பழக்கங்கள் என்று பழகி விட்டால் அவற்றைப் பிறகு மாற்றவே முடியாது. ஆனால் இளவயதிலே - பாலர்பருவத்திலே நல்ல பழக்கவழக்கமும் நண்பண்பும் எம்முடைய வாழ்க்கையில் இணைந்து விட்டால் அவை கடைசி வரைக்கும் எமக்கு உறுதுணையாக இருக்கும். நாம் எதுவும் தெரியாமல் தவறு இழைத்துவிட்டால் மனச்சாட்சி உறுத்திக் கொண்டேயிருக்கும். பிழை செய்ய இடமிருக்காது இந்த மாதரி நற்பண்பு பழகுமிடம் முன்பள்ளியே தான்.

மனிதப்பண்புகளும் நல்ல பழக்கவழக்கங்களும் பழகுமிடம் முன்பள்ளி தான் இந்த முன்பள்ளிப் பருவம் தான் எமது மனித வாழ்க்கையின் அடி அத்திவாரம். இந்த முன்பள்ளிச் சிறார்களை நாம் நாற்று மேடைக்கு ஒப்பிடலாம். ஏனெனில் பயமறியாத வஞ்சகமில்லாத பிஞ்சு நெஞ்சு உள்ளவர்கள் அவர்கள். எதைச் சொல்கின்றோமோ அதையே சரி என்று கூறும் தூய மனம் கொண்டவர்கள். இவர்களை

நாற்று மேடை என்று ஒப்பிடுவதே சிறந்தது எனலாம். நாம் பயனுள்ள வளமான பசளைகள் நிறைந்த ஒரு நல்ல நிலத்தில் அதனைப் பதப்படுத்தி விதை போடுகின்றோமோ அப்போதுதான் அதில் இடப்படும் விதையும் நமக்கு பயனளிக்கும் நல்ல விளைச்சலையும் தரும்.

இதே போன்று தான் குழந்தை வளர்ப்பில் கவனம் இருக்க வேண்டும். சின்னப் பிள்ளையாக முன்பள்ளியில் கற்கின்ற பாடங்களும் பழக்கவழக்கங்களும் நல்லதாக இருத்தல் மிகவும் முக்கியமானதாகும். முன்பள்ளியிலே நற்பழக்கம் பழகிக் கொள்வது அத்தியாவசியமான ஒன்று. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பது பழமொழி குழந்தையாக வளர்ந்து பாலர் பருவம் அடைகின்ற பொழுது நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் நற்பண்புகள் யாவும் பழகிக்கொள்ள வேண்டும். இந்த சிறு பாலப்பருவத்திலே நல்லவற்றை பழகினால் தான் அது முதுமையிலும் தொடர்ந்து வரும். இதனை நாம் நன்கு ஆராய்ந்து நோக்கும் பொழுது முன்பள்ளிக் கல்விதான் வாழ்க்கையின் உரமாகத் தோன்றுகின்றது. என்பது வெள்ளிடை மலை. எனவே இதனை உணர்ந்த நல்ல மனிதர்களைக் கொண்ட நற்சமுதாயத்தை வளர்த்தெடுக்க நாமும் பாடுபடுவோமாக.

திருமதி. ஜெயக்குமார் இராஜேஸ்வரி
முன்பள்ளி ஆசிரியை,
'சர்வமத முன்பள்ளி',
10ம் வட்டாரம்,
புங்குடுதீவு

**நாம் எல்லாம் அறிவோம் என்று மார்தட்டலாம் தவறல்ல**
**மற்றவர் ஏதும் அறியார் என நினைப்பது தான் தவறு**

# கோடி பல்லாண்டு நீடுழி வாழியவே!



திருமருவும் ஈழ வளநாட்டில்
திலகமென விளங்கும் யாழ் நகரின் - கண்ணே
தென்பாலமைந்த தொல்பெரும் தீவுகளில்
பொங்கிடும் புகழ்மிகு புங்கை நகரினிலே!
வங்கக்கடலலைகள் பங்கமின்றி ஆர்ப்பரிக்க
தங்கும் கட்டுமரங்கள் அங்கம் குலுங்கியாட
தெங்கும், பனை நுங்கும் தொன்மைப் புகழ் மணக்க
எங்கும் எழில் கொஞ்சும் ஏற்றமிகு பதிதனிலே!
ஆலயத்து மணியோசை ஆனந்தமாய் துயிலெழுப்பும்
இங்கிதமாய் இராஜ இராஜேஸ்வரி அம்மன்
இதமான கோயில் வாசல் பதமான அருள்சொரியும்
ஈடிணையில்லா நாமமதை நயமாகத் தனதாக்கி
உயர்வான கலையகமாய் உன்னதமாய்க் காட்சி தந்து
அகவை எண்பதினிலே அமுத விழாக் காணுகிறாள் !
அழகுக் கலையகமே அம்மன் அருள் கொண்டவளே!
ஆண்டாண்டு காலமதாய் அகிலத்திலே வாழியவே!

எண்ணும் எழுத்தும் கண்ணெனவே கற்றிட வைத்தாய்
அணிநடை பயன்றிட நல் அரங்கினை அமைத்தாய்
ஆற்றலுறு முதலவனை, நல்லாசிரியரைக் கண்டாய்
அமுதமொழி பகரும் பாலரை நின் பதி சேர்த்தாய்
தோற்றமுற என்றும் நற்தேட்டமுடன் வாழ்க!

மாண்புடன் அம்மன் அழகுறு நாமம் - தனை
மகிழ்வுறக் கொண்ட மதிப்புறு – கலையகமே!
அமிழ்தினும் இனிதாய் அமுதவிழாக் கண்டாய் - நினை
அனுதினம் அணுகிடும் சிறார்களை அணைத்துமே
அகிலத்தில் உயர்த்தி வைப்பாய் !

வையகம் போற்றிடவே – என்றும்
வாழிய வாழியவே!
இராஜ இராஜேஸ்வரித் தாயவளே!
இராஜ யோகமுடன் பல்லாண்டு
பார் போற்ற வாழியவே!
கோடி பல்லாண்டு
நீடுழி வாழியவே!

"தலைத்தீவான்"
த.ஒளிவண்ணன்
கோட்டக்கல்வி அலுவலகம்
வேலணை

**நாங்கள் கால் பதிக்கும்**
**நிறுவனங்களுக்கு முழுதுமாக**
**விசுவாசமாயிருப்போம்**



## இராஜ ராஜேஸ்வரியே வாழ்க

இலங்கை வடபால் அமைந்து
சப்த தீவுகளில் பொன் கொழிக்கும் தீவு என
போற்றப்படும் புங்குடுதீவே – நீ
புகழுடன் வாழ்க – நீ

குழந்தை தனை பத்திரமாய் பார்த்து
வளர்ப்பது தாயின் கடமை – அவை
சித்திரமாய் செதுக்கி எடுப்பது – ஆசான்
கொள்கை தன்னில் குறிக் கோளைத் தாங்கி
உயிர் நாடியாய் விளங்கும் எங்கள்
கலைக் கோயிலாம் இராஜராஜேஸ்வரியே வாழ்க – நீ

புயல் எறிந்து ஓங்கும் கடலருகே
நயம் கொண்டு எழுந்தருளி இருக்கும்
கண்ணகி அம்மன் ஆலயத்தின் சிறப்புடனே
சீர் பெற்று விளங்கும் எங்கள்
வீராமலை கிராமமே வாழ்க - நீ

திறமைகள் பல இருந்தும் வறுமையை காரணம்காட்டி
கல்விதனை ஏட்டுச்சுரைக்காயாக நினைக்கும் - குழந்தைகளின்
மனதினிலே நம் இராஜ ராஜேஸ்வரி வித்தியாலயத்தின்
நாமத்தை தினம் பாடி சங்கடங்கள் மறந்து – நாளும்
சமய நெறிகள் தழைத்தோங்க அருந்தமிழ் கல்வி கற்று - இவ்
அவனியிலே அறிஞர்களாய் வாழ வழிகாட்டும் - எங்கள்
இராஜ ராஜேஸ்வரி வித்தியாலயமே வாழ்க - நீ

சிறு கல்விக் கூடமாகத் தொடங்கி
ஆண்டாண்டு காலம் உழைத்து
சீரான சேவைதனை தினைத்துணையும்
சிதையாமல் சிந்தாமல் அறிவூட்டிய
முந்தைய அதிபர் பலரும்
முடித்த சேவையின் விளைவாக
கல்வியிற் சிறந்த மேலானோர்.
பல நாடுகளில் புகழேந்தி வாழும்

எங்களினிய கவிக்கூடமே
இராஜ ராஜேஸ்வரியே வாழ்க – நீ

புதுமுறைப் பாலர் கல்வியில்
புனரமைப்பு ஆக்கம் செய்து
கல்விச்சாலையை அறநெறியில்
காத்து சேவையாற்றும் இன்றைய அதிபரும்
தகுதி சேர்தகமைகள் கொண்டு
குழந்தைகளும் மகிழும் படி கலகலப்புடன்
பாடந்தன்னைக் கற்றுக் கொடுத்து மகிழ்வூட்டும்
தளம்பாத ஆசான்களும்
களிப்புடனே கல்வி பயிலும் பாலர்களும்
பெருமையுடன் முன்னேறி வளரும்.
கல்விக் கழகமாம் இராஜராஜேஸ்வரியே
நித்திலம் தன்னில் நீடூழி வாழ்க – நீ

தீங்குகள் ஒழிய வேண்டும்
சிறார்கள் உயர்வடைய வேண்டும்
பாங்குடன் பாஷை நாலு பயின்று
பாரினில் உயர்ந்திட வேண்டும்.

நிதம் பெருமிதம் கொண்ட கலையாய்
ஏற்றம் மிகு சிறப்புடன் விளங்கும்
எங்கள் கலை வளம் மிகு கோவிலே
இராஜ ராஜேஸ்வரியே வாழ்க – நீ

வாழ்க இராஜேஸ்வரியே வாழ்க – நீ
இந்த வையகம் உள்ளமட்டும் வாழ்க – நீ
தாயகத்தில் எம் இனம் உள்ளவரை
தழைத்து நாளும் வாழ்க – நீ
சீரிய அறமும் சிறந்த வாழ்வும் தந்து
புகழ் பரப்பி நாளும் வாழ்க நீ
மாணவரை அழைத்து வாழ்வு தரும்
இராஜ ராஜேஸ்வரியே வாழ்க வாழியவே……

தொண்டர் ஆசிரியை
செல்வி. அனுஸா சந்திரபாலன்

**தன்னால் வழிகாட்டப்பட்டவரின்
உயர்வு கண்டு பூரிப்பதுதான்
உண்மையான ஆசிரியத்துவம்**

# குரங்கு நடனம்

ஒரு ராஜகுமாரனுக்கு அரசவை நடனக்கலைஞர்கள் அலுத்துப் போய், சில குரங்குகளை நடனமாடப் பழக்கினார்கள். அவைகள் அரசுக்கலைஞர்களை விட சிறப்பாக நடனமாடின. மக்கள் கண்டு களித்தனர். ராஜகுமாரன் தன் அவைக்கலைஞர்களைப் பார்த்து, நீங்களும் இருக்கிறீர்களே! தண்டச்சோறு. இந்தக்குரங்குகளைப் பாருங்கள் எப்படி நடனமாடுகின்றன! அடுத்த மாதத்திலிருந்து உங்கள் எல்லோருக்கும் ஒருமாத நோட்டீஸ் கொடுத்து, சீட்டுக் கிழிக்கப் போகிறேன்' என்றான். அவன் சொன்னது போல் குரங்குகள் ஒரே சீராக அழகாக நடனம் ஆடிக்கொண்டிருக்கையில் அரசவைக் கலைஞர்களில் ஒரு கோமாளிக்கு ஒரு யோசனை தோன்றியது. 'கொஞ்சம் பொரிகடலைப்பட்டாணி கொண்டு வாப்பா' என்று தன் உபகலைஞரிடம் சொன்னார். அவன் கொண்டுவர, மேடையில் பொரி கடலைப் பட்டாணியை இறைத்தார். அவ்வளவு தான். குரங்குகள் தம் நடனத்தைத் துறந்து, இரண்டு கைகளாலும் கடலையைப் பொறுக்கி வாயில் அடைத்துக் கொள்ள, அடித்துக்கொள்ள ஆரம்பித்தன. மேடையில் குழப்பம். நடன நிகழ்ச்சிக்காக தைத்திருந்த பட்டுக்குல்லாய், சட்டையெல்லாம் பியத்துக்கிழித்துக் கொண்டன. மக்கள் அனைவரும் 'என்ன இருந்தாலும் குரங்கின் புத்திமாறுமா? என்றார்கள்.

க.கரிகரன்
தரம் - 05



# உன்னை நம்பு

வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு....

கல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு.....

நம்பிக்கையும் தைரியமும் வெற்றிக் கிரீடத்தின்

இரு ஒளிர் மிக்க வைரங்கள்...

உலகின் மிகச் சிறந்த வைரங்கள் மனிதர்

மனதில் தோன்றும் நல்ல எண்ணங்களே

நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே

விழும் போது உன்னைச் சுமக்கும்....

கவலைகள் ஒரு போதும் வெற்றியை தருவதில்லை

முயற்சிகளே........

விடியும் என்று விண்ணை நம்பும் நீ

முடியும் என்று உன்னை நம்பு....

சா.காயத்திரி

தரம் - 04

# கற்றுக் கொள்ள வேண்டியவை

நன்மை செய்யக் கற்றுக் கொள்
நலமாய் வாழ்க் கற்றுக் கொள்
உண்மை பேசக் கற்றுக் கொள்
உயர்வாய் வாழக் கற்றுக் கொள்

துயரைப் போக்கக் கற்றுக் கொள்
துணிந்து செயற்படக் கற்றுக் கொள்
உழைத்து வாழக் கற்றுக் கொள்
உலகை ஆளக் கற்றுக் கொள்

இனிதாய் பேசக் கற்றுக் கொள்
இன்பம் பயக்கக் கற்றுக் கொள்
வறுமை வந்தால் வாழ்வினிலே
தாங்கி ஏற்கக் கற்றுக் கொள்

அன்பாய் வாழக் கற்றுக் கொள்
பண்பாய் பழகக் கற்றுக் கொள்
அழியாக் கலையை வாழ்வினில்
அறிந்து பயின்றிடக் கற்றுக் கொள்

கு.ஜன்யா
தரம் - 04



# நாம் சென்ற கல்விச் சுற்றுலா

04.10.2017 அன்று புதன்கிழமை காலை 06.30 மணிக்கு எல்லா மாணவர்களும் பாடசாலைக்கு வந்துவிட்டோம். சுற்றுலா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதிபர், ஆசிரியர்கள், சிரித்த முகத்துடன் எம்மை வரவேற்றனர். "பிள்ளைகளே சுற்றுலா செல்ல எல்லோரும் தயார் தானே? சரஸ்வதிதேவியை வணங்கி எமது பயணத்தை ஆரம்பிப்போம்" என்று அதிபர் கூறினார். நாங்கள் எல்லோரும் வரிசையாகச் சென்று சரஸ்வதி தேவியை வணங்கினோம். எமது களப்பயணத்தை ஆரம்பித்து வைப்பதற்காக வருகை தந்திருந்த தீவகவலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் எமக்கு ஆசிகள் கூறி எம்மை அனுப்பி வைத்தார்.

யா/ புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி த.க வித்தியாலயமாகிய எமது பாடசாலையின் முன்னால் இருந்து பேருந்து வண்டி புறப்பட்டது. முதலில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டோம் தொடர்ந்து விநாயகர் ஆலயத்தில் வழிபாடு செய்து எமது பயணத்தை யாழ்ப்பாணத்தை நோக்கி காலை 07.00 மணிக்குப் ஆரம்பித்தோம். யாழ்ப்பாணத்தில் இருக்கும் பல இடங்களையும் பார்வையிடவேண்டும் என்ற எண்ணம் எம்மிடம் தோன்றியது. அதிபர் புங்குடுதீவு வேலணைப் பாலத்தில் பேருந்து செல்லும்போது அப்பாலத்தின் வரலாறு பற்றிக் கூறினார்.

நாங்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியுடன் சென்றோம். காலை 07.40 மணியளவில் யாழ்ப்பாணக் கோட்டையின் முன் பேருந்து நிறுத்தப்பட்டது. நாங்கள் கோட்டையை சுற்றிப் பார்த்தோம். அங்கிருந்தவர்கள் அதன் சிறப்புக்கள் பற்றி எமக்கு எடுத்துக்கூறி விளக்கினர். அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, நாம் யாழ்ப்பாண

பொது நூலகத்திற்குச் சென்றோம். அங்குள்ளவற்றை பார்வையிட்டோம். சிறப்பாக சிறுவர் பகுதியின் செயற்பாடுகளை அறிந்து கொண்டோம்.

அதன்பின்னர் யாழ்நகர மத்தி மணிக்கூட்டு கோபுரம், யாழ் மத்திய கல்லூரி, யா/ வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் போதனா வைத்தியசாலை, யாழ் பிரதான பஸ் நிலையம் என்பவற்றைப் பார்வையிட்டுக் கொண்டு ஐந்து சந்தியில் உள்ள மசூதி (பள்ளிவாசல்) ஒன்றுக்குச் சென்று பார்த்தோம். எமது காலை உணவை பேருந்து வண்டியில் பெற்றுக் கொண்டோம். அங்கிருந்து யா/ இந்துக்கல்லூரி, யா/ இந்து ஆரம்ப பாடசாலை, யா/இந்து மகளிர் கல்லூரி என்பவற்றை பார்வையிட்டுக்கொண்டு திருநெல்வேலிச் சந்தைக்கு மு.ப 10.20 மணிக்கு சென்றோம். அங்கு பவலிதமான மரக்கறிகள், பழங்கள், இலைவகைகள் மற்றும் பொருட்கள் விற்கும் பகுதிகளையும், பொருட்களை விற்பவர்கள் வாங்குபவர்களையும் கண்டுகொண்டோம்.

அடுத்து மு.ப 11.00 மணியளவில் நல்லூர் நோக்கி பேரூந்து புறப்பட்டது. நல்லூர் மந்திரிமனை, சங்கிலியன் சிலை, யமுனா ஏரி என்பனவற்றைப் பார்வையிட்டோம். அவற்றின் வரலாற்று விளக்கங்களை அதிபர், ஆசிரியர் எமக்குத் தந்தனர். பின்பு நல்லூர்கந்தன் ஆலயம் சென்று வழிபட்டோம். அதன் பின்னர் யாழ் பல்கலைக்கழகத்திற்குச் சென்றோம். அங்கு வருகை தந்த புங்குடுதீவைச் சேர்ந்த டொக்டர் சிறிதரன் அவர்கள் எம்மை அழைத்துச் சென்று பல்கலைக்கழக வளாகத்தைக் காண்பித்தார். அங்கிருக்கும் போது நாமும் பெரியவர்களாக வளர்ந்து இங்கு வந்து படிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. பின்னர் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள விடயங்களை அறிந்து கொண்டோம். எமக்கு ஆசிகளும் நல்ல விளக்கங்களும் வணபிதா ஆம்ஸ்ரோங் அடிகள் தந்தார்.

அடுத்ததாக பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவிற்குச் சென்று விளையாடி மகிழ்ந்தோம். அங்கே எமது மதிய உணவையும் பெற்றுக் கொண்டு சற்று ஓய்வாக இருந்தவிட்டு பி.ப 02.45 மணியளவில் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்குச் சென்றோம். புகையிரதக் கடவைகள் மற்றும் செயற்பாடுகளைப் பார்வையிட்டோம்.

அங்கிருந்து புகையிரதம் மூலம் காங்கேசன்துறைக்குச் சென்றோம். புகையிரதப் பயணம் எமக்குப் புதிய அனுபவமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. செல்லும் வழியில் காணப்பட்ட புகையிரத நிலையங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், தோட்டங்கள் தொழில் நிலையங்கள் என்பவற்றைப் பார்வையிட்டுச் சென்றோம். காங்கேசன்துறையில் எமக்காக காத்திருந்த பேருந்தில் மீண்டும் ஏறிக்கொண்டு பி.ப 04.30 மணியளவில் கீரிமலைக்குச் சென்றோம். அங்கு நகுலேஸ்வரம் கோவில், தீர்த்தக்கேணி ஆகியவற்றைப் பார்த்தோம். அவற்றின் சிறப்புக்களை அறிந்து கொண்டோம்.

அடுத்து மாதகலுக்குச் சென்றோம். அங்கே சங்கமித்தை வந்திறங்கிய இடத்தையும் ஜம்புகோளப்பட்டண விகாரையையும் பார்த்ததுடன் அதன் அருகிலிருந்த பெரிய சிவன் சிலையையும் விழுதில்லாத ஆலமரங்களையும் பார்த்து வியப்படைந்தோம். அங்கிருந்த பாட்டி ஒருவர் அவற்றின் சிறப்புக்களை எடுத்துக் கூறினார்.

அடுத்ததாக மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தை பி.ப 06.00 மணியளவில் சென்றடைந்தோம். ஆஞ்சநேயர் சிலையைப் பார்க்க மகிழ்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. ஆலயத்தையும் சுற்றிப்பார்த்தோம். அத்துடன் எமது கல்விச் சுற்றுலாவை நிறைவு செய்து கொண்டு பேருந்தில் ஏறிக்கொண்டோம். பேருந்து புங்குடுதீவை நோக்கில் புறப்பட்டது. பி.ப 07.00 மணியளவில் மீண்டும் பாடசாலையை வந்தடைந்தோம். இச்சுற்றுலா எமது வாழ்வில் என்றுமே

மறக்கமுடியாத ஒரு நிகழ்வாக எமது மனதில் பதிந்துள்ளது. இச் சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்ற அதிபர், ஆசிரியர்களுக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

ச.டிலக்சனா

தரம் - 05

**நாம் மேலாளராக (Boss) இல்லாமல் தலைவராக (Leader) இருப்பது தான் எம்மை மேலும் உயர்த்தும்**

# குருவடி தொழுதே பணிந்து போற்றுவோம்

மாதா பிதா குரு தெய்வம்
அவர் மலரடி தினம் தினம் வணங்குவோம்.
மண்ணுக்கிற்கு  எம்மை அளித்தவர் மாதா
மற்றவர் போற்ற வளர்த்தவர் எம் பிதா
அறிவுக் கண்ணைத் திறந்தவர் எம் ஆசான்
அகிலம் பொற்ற வைத்தவர் எம் ஆசான்
தேடிப் பலவும் கற்றவர் தெய்வமாய்
அதை எமக்கு அளித்தவர் ஆசான்
சமூகத்தில் நாம் தலை நிமிர்ந்து வாழ
சரியான வழியினை காட்டுபவர் ஆசான்
கற்பவர் மனநிலை நுட்பமாக அறிந்து
அற்புதமாக கற்பிப்பவர் எம் ஆசான்
தம் திறனை காட்டி எம் திறனை வளப்பவர்
எம் கடன் அவர் பணி செய்து கிடப்பதே

அக்டோபர் ஐந்து ஆசானுக்கு உரிய தினம்
அன்புடன் அவரைக் கௌரவிக்குத் நாள்.
திருவளிக்கும் கலை ஞானம் அனைத்தையும்
எமக்கு உவந்தளிக்கும் குழுவை
தொழுதே பணிந்து போற்றுவோம்.

வெ. சுலக்சன்
தரம் - 05

## அணிற் பாடல்

அழகு மிக்க பிள்ளையே
அங்கும் இங்கும் ஓடியே
பழங்கள் தேடிப் பிடிக்கின்றாய்
பையப் பையக் கொறிக்கின்றாய்

வளைத்து வாலைத் தூக்குவாய்
மரத்தின் உச்சி எறுவாய்
கிளை தோறும் தாவுவாய்
கெடுதி எதம் செய்திடாய்

மூன்று கோடு முதுகிலே
முன்பு ராமர் தந்ததோ
நான்கு முகத்துப் பிரமனால்
நன்கு படைக்கப்பட்டதோ

கேட்ட கேள்வி கேட்டதும்
கீச்சுக் கீச்சு என்கிறாய்
ஓட்டம் பிடிக்கப் பார்க்கின்றாய்
ஒளிந்து கொள்ள நினைக்கிறாய்

பிள்ளை என்றே உன்னை நான்
பிரியமாக அழைக்கின்றேன்
கிள்ளிக் கிள்ளிப் பழங்களைக்
கீழே எனக்கும் போடுவாய்

ச.டிலக்சனா
தரம் - 05



## பொது அறிவு

01. இலங்கையில் வெளியாகிய முதல் தமிழ்ப் பத்திரிகை – உதயதாரகை

02. உடல் வளர்ச்சிக்கு உதவுவது – புரதம்

03.இலைகள் அற்ற தாவரங்கள் - நாகதாளி, சதுர்க்கள்ளி, பிள்ளைக் கற்றாளை

04.எமது நாட்டை ஆட்சி செய்த அந்நிய நாட்டவர்கள் - போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்

05.காலைச் சூரிய ஒளியில் கிடைக்கும் விற்றமின் - விற்றமின் D

06.மின்குமிழைக் கண்டுபிடித்தவர் - தோமஸ் அல்வா எடிசன்

07.கணினியைக் கண்டுபிடித்தவர் - சார்லஸ் பபேஜ்

08.வானொலியைக் கண்டுபிடித்தவர் - மார்க்கோனி

09.அளவையியலின் தந்தை – அரிஸ்ரோட்டில்

10.பாலைவனக் கப்பல் என அழைக்கப்படும் பிராணி – ஒட்டகம்

11.பச்சையம் இல்லாத தாவரம் - காளான்

12.புளிப்புச் சுவையுள்ள பழங்களில் காணப்படும் விற்றமின் - விற்றமின் C

13.புராதன காலத்தில் போர்கள் செய்ய பயன்படுத்தப்பட்ட பிராணிகள் - யானைப்படை, குதிரைப்படை

14.வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பூக்கள் - அந்தூரியம், ஓர்க்கிட்

15.நுளம்பின் மூலம் பரவும் நோய்கள் - சிக்குன்குனியா, மலேரியா யானைக்கால், டெங்கு

16.பூக்கள் வாடாமல் இருக்கப் பயன்படுவது – அஸ்பிரின்.

17.ஞாபக சக்தி உடைய பிராணி - யானை

18.நவீன ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1896 (எதென்ஸ்)

19.நீரைச் சுத்திகரிக்கப் பயன்படும் இரசாயனப் பதார்த்தம் - குளோரின்

20.நோபல் பரிசு பெற்ற முதன் பெண்மணி – மேரிகியூரி

21.நள்ளிரவில் சூரியன் உதயமாகும் நாடு – நோர்வே

22.குட்டியீன்று பாலூட்டும் மீனினம் - திமிங்கலம்

23.குட்டியீன்று பாலூட்டும் பறவை – வௌவால்

24.சுறுசுறுப்பான பிராணிகள் - எறும்பு, தேனீ

25.பண்டைய காலத்தில் தங்கத்தின் நிறையை அறியப் பயன்படுத்திய வித்து - மஞ்சாடி

26.உலக ஆசிரியர் தினம் - ஒக்ரோபர் - 06

27.உலக சிறுவர் முதியோர் தினம் - ஒக்ரோபர் - 01

க.கம்சிகா

தரம் - 04

# அன்னை திரேசா

தலைவர் அவர்களிற்கும் பிரதம விருந்தினர் அவர்களிற்கும் சிறப்பு விருந்தினர்களிற்கும் இங்கு வருகை தந்திருக்கும் பெற்றோர், பெரியோர், நலன் விரும்பிகள் என் சக மாணவர்கள் அனைவருக்கும் எனது இன் நேர வணக்கங்கள் நான் பேச எடுத்துக் கொண்ட விடயம் “அன்னை திரேசா” உலகம் போற்றும் சமூக சேவையாளர்களில் அன்னை திரேசாவும் ஒருவர். இவர் தனது சேவையால் மக்கள் மனங்களில் இடம்பெற்றவர். இவரது இயற்பெயர் “அக்னஸ் கான்ஜா போஜா” என்பதாகும். இவர் “யூகொஸ்லாவியா” நாட்டில் ஸ்காட்ச்சி என்னும் சிற்றூரில் 27.08.1910 இல் பிறந்தார். தொண்டு செய்வதற்காகவே இந்தியாவிற்கு வந்தார். இவர் 1931 இல் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். இதன் பொருட்டு தனது பெயரினை **திரேசா** என மாற்றிக் கொண்டார். இந்தியாவில் கெஸ்கொத்தாவில் தனது தொண்டுகளை மேற்கொண்டார். “சிசுபவன்” என்னும் குழந்தைக் காப்பகத்தினை நிறுவினார். தெருவோரங்களில் இறக்கும் நிலையில் உள்ள ஏழைகளை எடுத்து வந்து “நிர்மல் இதயம்” என்னும் நிலையத்தினை உருவாக்கினார். முதியோர் காப்பகம், தொழுநோயாளர் இல்லம் போன்றவற்றினை நிறுவினார். அன்னை திரேசாவின் பணிகள் அளப்பரியன. அவரது தொண்டுகளை பாராட்டும் வகையில் 1979 இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்திய அரசு இவருக்கு மிக உயர்ந்தபட்டமான “பாரத ரத்னா” என்னும் பட்டத்தினை வழங்கி கௌரவித்தது. அன்னை திரேசா 1997.09.05 இல் அமரத்துவம் அடைந்தார். பாப்பரசர் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கி உள்ளார். அன்னை திரேசாவின் பெயர் உலகு உள்ளவரை நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. நாமும் பொது நோக்குள்ளவர்களாக வாழ்ந்து உலகிற்கு நல்லவற்றைச் செய்து பிறர் மெச்சும்படி வாழ்வோமாக.

நன்றி வெ.சுலக்சன்

## Prize Day Speech

Honorable guests, my dear of Principal and Teachers, parents and my dear friends.

It is my pleasure to make a short speech on this important day. Getting a prize is an important moment for students like me. When we study hard, we make good achievements. When we make achievements we prizes and awards. We earn name and fame for the school, parents and the society. Children should work hard to get good grades. We should obey our parents and teachers. We should respect them. We also should develop good habits. Good habits make us become good students. Only good students can achieve great things.

Further parents give us support, guidance and advice. We children need love, food and protection from our parents. They provide all these with greatest difficulty. Without them we cannot excel in education. We cannot achieve good things, besides, teachers also work hard to make our life better. They are next to god. They always want us to be better students.

Thank you

Miss.S.Gayathiri

Grade – 4

## இலங்கை பற்றிய சிறப்பான தகவல்கள்

1. சிறப்புப் பெயர் :- இந்துசமுத்திரத்தின் முத்து இந்து சமுத்திரத்தின் நித்திலம்

2. இலங்கையின் பழைய பெயர்கள் :- தப்பரபேன், தம்பபன்னி, செரண்டிப், சீலது, வீபம், சீலன், செயிலாவோ, சிலான், சிலோன், இலங்காபுரம், ஈழம்

3. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட தகவல் கிடைக்கும் இடங்கள் :- பொம்பரிப்பு, குருகேகுகை, இன்பன் கட்டுவ, பாகியன்கல,இராவணஎல்ல.

4. வரலாறு கூறும் நூல்கள் :- மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம்

5. சூளவம்சம் இயற்றியவர் :- தர்மகீர்த்திதேரர்.

6. பூர்வீகக்குடிகள் :- இயக்கர், நாகர் என்ற திராவிட பரம்பரையினர்

7. பூர்வீக மாகாணங்கள் :- ராஜரட்ட, மாயரட்ட, றுகுணுரட்ட

8. ஒரு நாட்டின் பெருமை, கௌரவங்களை பிரிதிபலிப்பவை :- தேசியக்கொடி, தேசிய இலட்சனை, தேசியகீதம்.

9. தேசியக்கொடி வாளேந்திய சிங்கம் (1950 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது)
   - ❖ உருவாக்கியவர் கேர்ணல் ஓல் கோட்
   - ❖ இனங்களும் நிறங்களும்

     தமிழர் - செம்மஞ்சள்

     முஸ்லிம் - பச்சை

     சிங்களவர் - சிங்கத்தைச் சூழவுள்ள காவிநிறம்

## இலங்கையின் பிரதான வீதிகளின் பெயர்கள்

A விசேட வகை - குளியாப்பிட்டியா – கொழும்பு

A1 - கொழும்பு - கண்டி

A2 - கொழும்பு - வெள்ளவாய

A3 - போலியகொட - புத்தளம்

A4 - கொழும்பு - மட்டக்களப்பு

A5 - பேராதனை - செங்கலடி

A6 - அமபேபுஸ்ஸ - திருகோணமலை

A7 -அவிஸ்ஸாவெல - இரத்தினபுரி

A8 - பாணந்துறை - இரத்தினபுரி

A9 - கண்டி - யாழ்ப்பாணம்

A10 - கண்டி - புத்தளம்

A11 - மரதன் கடவெல - திருகண்டிமடு

A12 - புத்தளம் - திருகோணமலை

A13 - அநுராதபுரம் - கல்கமுவ

A14 - மதவாச்சி - தலைமன்னார்

A15 - மட்டக்களப்பு - திருகோணமலை

A16 - பேரகல - ஹாலிஎல

A17 - காலி - மாதம்பே

A18 - பெல்மதுளை - நோனாமே

A19 - பொல்காவிவல - கேகாலை

A20 - அநுராதபுரம் - ரம்பேவ

A21 - கேகாலை - கரவனல்ல

A22 - பசறை - மொணராகலை

A23 - வெள்ளவாய - எல்ல

A24 - மாத்தறை - அக்குரஸ்ஸ

A25 - சியன்பலன்துவ - அம்பறை

A26 - கண்டி - படியந்தலாவ

A27 - அம்பாறை - மகாஓயா

A28 - அநுராதபுரம் - படேனியா

A29 - வவுனியா - ஹொரவப்பொத்தானை

**சா. காயத்திரி**

**உயர்வு என்பது பட்டங்களைப் பெறுவதில் மட்டும் தங்கியிருப்பதாக நினைப்பது அறிவீனம்**

## நவராத்திரி விழா



## சிரமதானத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்



# கல்விச்சுற்றுலா



## அமுதவிழா ஆண்டில் பரிசு பெறுவோர் விபரம்

* வகுப்பு ரீதியாக பாடங்களின் அடைவு மட்டத்தில் தெரிவானோர் - 2016

  தரம் 1 செல்வி இ.கயல்விழி

  தரம் 2 செல்வி சா.கபிஷாயினி

  தரம் 3 செல்வி சா.காயத்திரி

  தரம் 4 செல்வன் வெ.சுலக்ஷன்

  தரம் 5 செல்வன் கே.மதுசியன்

* புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்டவர்கள்

  2015 – செல்வன் ச.சுதர்சன்

  செல்வி மோ. மோகனப்பிரியா

  2016 – செல்வன் கே.மதுசியன்

  2017 – செல்வன் வெ.சுலக்ஷன்

  செல்வன் க.கரிகரன்

  செல்வி ச.டிலக்ஷனா

* வரவொழுங்கு செல்வன் வெ.சுலக்ஷன்
* சிறந்த விளையாட்டு வீரன் செல்வன் மோ.டிலக்சன்
* பரிசில் நாள் பேச்சு-- தமிழ். செல்வன் வெ.சுலக்சன்

  ஆங்கிலம். செல்வி சா.காயத்திரி

* சிறந்த அபிநய நடிப்பு (கவின் கலை) செல்வி கு.யன்ஜா
* சிறந்த தலைமைத்துவம் செல்வன் நி.லக்சன்
* சிறப்பான புத்தகப் பாவனை சுத்தம் செல்வி சா.காயத்திரி
* பொது அமைப்புகளில் தெரிவானோர்

  பாணாவிடை சிவன் கோவில் கட்டுரைப் போட்டி 1ம் இடம் பெற்றமைக்காக செல்வி.க.கம்சிகா
* சமுர்த்தி நிறுவன மது ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் நடைபெற்ற போட்டியில் சிறந்த அறிவிப்பாளராக மாவட்ட மட்டத்திற்கு தெரிவானவர்

  செல்வன் வெ.சுலக்சன்

**வெற்றியில் பெருமிதப்படாதவன்**
**தோல்வியில்**
**துவண்டுவிடமாட்டான்**

## 80வது ஆண்டு நிறைவு விழா மற்றும் மலர் வெளியீட்டிற்கு மனமுவந்து உதவியோர் விபரம்

| | |
|---|---|
| புங்குடுதீவு கண்ணகை அம்மன் தேவஸ்தானம் | 10,000.00 |
| தில்லைநாதன் இரட்னேஸ்வரன் (லண்டன்) | 10,000.00 |
| கனகசபை மகாலட்சுமி<br>(ஓய்வு பெற்ற ஆசிரியை, பிரான்ஸ்) | 4,000.00 |
| நட்புக்கரங்கள் (சுவிஸ்) | 22,000.00 |
| சைவ இளைஞர் சங்கம், கண்ணகைபுரம் | 25,000.00 |
| பொன் சுந்தரலிங்கம் (கனடா) | 12,000.00 |
| துரைச்சாமி பூரணகுமார் (கனடா) | 12,000.00 |
| நடா உதயன் (கனடா) | 12,000.00 |
| செல்வராசா கல்விக்கரசி (கனடா) | 12,000.00 |
| செல்லத்துரை சபாரத்தினம் (கனடா) | 6,000.00 |
| புங்குடுதீவு உலக மையம் | மதிய உணவு |

**நாம் யாரிடம் எதை எதிர்பார்க்கிறோமோ முதலில் அதை அவருக்கு நாம் கொடுப்போம்**

## நன்றிகள்

இவ்விழாவிற்கான அனுமதியுடன் ஊக்கமும் தந்த கல்விப் பணிப்பாளர்கள், மலரிற்கான வாழ்த்துரைகள் வழங்கியோர், உதவிக்கரம் நீட்டிய அன்பர்கள், ஆலோசனைகளை வழங்கியவர்கள், ஒத்தாசை வழங்கிய பெற்றோர்கள் நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் "நிவாஸ்" பதிப்பகத்தினருக்கும் மற்றும் சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி வித்தியாலயம்



வெளியீடு : நிவாஸ் பதிப்பகம்



## அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தனது மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதம்.

உழைத்து சம்பாதிக்கும் ஒரு டொலர் உழைக்காது சம்பாதிக்கும் ஐந்து டொலரைவிட
மதிப்பானது என்பதை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
தோல்வியை ஏற்றுக்கொள்ளவும்
வெற்றியை அனுபவிக்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
அவனுக்குப் பொறாமைக்குணம் வந்துவிடாமல் கவனமாகப்
பார்த்துக் கொள்ளுங்கள். மௌனமாக இரசித்து சிரிப்பதன் இரகசியத்தையும்,
எதற்கெடுத்தாலும் பயந்து ஒளிவது கோழைத்தனம்
என்பதனையும் புரியவையுங்கள். புத்தகம் என்னும்
அற்புத உலகின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள்.
இயற்கையின் அதிசயத்தை இரசிக்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
ஏமாற்றுவதைவிடத் தோல்வியடைவது மேல் என்று புரியவையுங்கள்.
மென்மையானவர்களிடம் மென்மையாகவும், முரடர்களிடம்
கடினமாகவும் அணுகுவதற்குப் பயிற்சி கொடுங்கள்.
கும்பலோடு கும்பலாகக் கரைந்து விடாமல் எந்தச் சூழலிலும்
தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயற்படும்
தைரியத்தை அவனுக்கு கற்றுக்கொடுங்கள். துயரமான வேளைகளில்
சிரிப்பது எப்படி என்றும், கண்ணீர் விடுவதில்
தவறு இல்லை என்றும் கற்றுக்கொடுங்கள். அவன் தன் மீது மகத்தான
நம்பிக்கை வைக்க வேண்டும் அப்போதுதான்.
மனித குலத்தின் மீது அவன் நம்பிக்கை கொள்வான் .இவற்றில் எவையெல்லாம்
சாத்தியமானவையோ அவற்றையெல்லாம்அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
அவன் மிக நல்லவன். என் அன்பு மகன்.

ஆபிரகாம் லிங்கன்
முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி